
சாத்தூர் மக்கள் தேவதையாக கருதிய
**K.C.A. சிதம்பர நாடார் அவர்களின் சமாதி**



சாத்தூரில் ஆற்று ரெயில்வே ப்ாலத்திற்கு கிழக்கே வைப்பாற்றின் வடகரையில் கட்டப்பட்டுள்ளது.

# கல்வியினால் மனிதநேயம் வளர்த்த பரம்பரையினர்

(ஆக்கியோன் : சாத்தூர் பா. இராஜாமணி)



,, கல்வி வளர்ச்சிக்காக தன் வாழ்நாளில் முக்கால் பாகத்தை செலவிட்டார். இத்தகைய உயரிய மனிதர் ஒருவர் வாழ்ந்தார் என்பதை வருங்கால சந்ததியினர் நம்புவது கடினமே ''

- பெருந்தலைவர் **K.** காமராஜர்

இப் புத்தகத்தின் மூலம் கிடைக்கும் வருவாய்
***காமராஜர் - குமாரசாமிராஜா***
***முதியோர் நல்வாழ்வு இல்லத்தின்***
அபிவிருத்திக்கு செலவழிக்கப்படும்.

விலை ரூ. 25

**M.C. சேகர்**
பொறுப்பாளர்
' வைப்பாறு ' பதிப்பகம்,
136, மன்னார் கோட்டை சாலை,
பாக்கியம் நகர்,
சாத்தூர்-626 203.

# கல்வியினால் மனித நேயம் வளர்த்த பரம்பரையினர்

ஆக்கியோன் : **பா. இராஜாமணி**

முதல் பதிப்பு : 1999

வெளியிட்டோர் :
**வைப்பாறு பதிப்பகம்**
136, மன்னர் கோட்டை ரோடு,
பாக்கியம் நகர்,
த.பெ. எண். 36
**சாத்தூர் - 626 203.**



கல்விக் கண்ணை திறந்தவர்
K. காமராஜர் அவர்கள்



**Dr. P.Pandian**, I.A.S., (RETD.)
M.A., B.T., D.LITT., F.I.P.A., (U.S.A.),
(KAVI YOGII BACON)
Poet, Author and Playwright
Editor, The Philosopher Guide

Madras Res:
2-5, Bhaskara Street,
Rangarajapuram,
MADRAS - 24.
Phone: 4845985

## அணிந்துரை

கல்வியினால் மனித நேயம் வளர்த்த பரம்பரையினர் என்ற நூலைப் படித்தேன்.

என் சிந்தனை சிறகடித்து **1945–46** க்குச் சென்று சாத்தூரை வட்டமிட்டு வந்தது. இந்து நாடார் எட்வர்டு உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். பா. இராசாமணி அவர்கள் வைப்பாறு என்னும் இதழை நடத்தி வந்தார்கள். என் கவிதைகளைத் தன் இதழில் வெளியிட்டு வெகுவாக என்னைப் பாராட்டியது பசுமை நினைவு.

K.C.A.D சிதம்பர நாடாரின் இரண்டாவது மகன் D.C. பார்லி தர்மராஜன் என்னுடன் ஒரே வகுப்பிலும், இருக்கையிலும் பயின்றவர்.இருவரும் ஒன்பதாவது படிக்கும் பொழுது நண்பர்களானோம். என்னுடைய ஆங்கிலப் படிப்பும், கவிதைத் திறனும் அவரை கவர்ந்தன. அவர் தன் புன் சிரிப்பும், அடக்கமும் என்னைக் கவர்ந்தன. ஒருமுறை அவருடன் அவர்கள் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது நன்கு உயர்ந்த விசால நெற்றியுள்ள கண்களில் ஒளி கொண்ட ஒரு தந்தையைக் கண்டேன். அவர் தான் K.C.A.D சிதம்பர நாடார்.

இந்த நூல் ஒரு வரலாற்று நூல். காவிரிப்பூம்பட்டணத்தைப் பாடிய பெரும்கவி உருத்திரங்கண்ணனாரைப் போன்று ஆசிரியர் பா. இராஜாமணி சாற்றுரைப் பற்றி எழுதியிருக்கின்றார்.

ஒரு புதிய சமுதாயம் உருவாக வேண்டுமென்றால் ஒரு மாமனிதர் தோன்ற வேண்டும். அந்த வரிசையில் வந்தவரே K.C.A. சிதம்பர நாடார்.

'வாணிபம் செய்வார்க்கு வாணிபம் பேணிப்
பிறவும் தம போல் செயின்'

என்ற குறளுக்கு இலக்கியம் ஆனவர் இந்தப் பெரியவர். இவர் தம் வழித் தோன்றல்களும் இவரின் சீரிய அடிச் சுவடுகளைப் பின் பற்றிய தால் ஒரு சகாப்தத்தை உருவாக்க முடிந்தது

தனியொருவனுக் குணவில்லை எனில் இந்த
சகத்தினை அழித்திடுவோம்.

என்று பாடிய பாரதியின் கனவுகளை நனவாக்கியவர் இப்பெரியார் கடைத்தெருவில் யாராவது சாப்பிடாமல் படுத்திருக்கின்றார்களா எனப் பார்த்து எழுப்பி உணவூட்டிய அற்புதக் கொடையே அவர்கள் வழி வந்தவரை இன்றும் வாழ வைக்கிறது.

நாடார் சமுகத்தைத் தவிர்த்து மற்ற இன மாணவர்களுக்கே பாதிச் சம்பளச் சலுகை என்ற பண்பால் "அந்த இனம்" நாளும் ஓங்குகிறது.

இந்த நூல் ஒரு சமுக, பொருளாதார, அரசியல், ஆளுமை வரலாற்று நூல் இதில் அரிய கருத்துக்கள் காணக் கிடைக்கின்றன. இதை பள்ளிகளில் பாட நூலாக வைத்தால் மாணவர்கள் உள்ளத்தில் உழைக்கும் உத் வேகம் வளரும்.

பெருந் தலைவர் காமராஜரின் வழி நிற்கும் அன்பர் பா. இராசாமணி இது போன்ற நூல்கள் நிறைய எழுத வேண்டும். உலகம் பாராட்டும்.

காலையிலே வைப்பாற்றில் குளித்து விட்டு
கல்விகற்கப் பள்ளிக்குச் செல்வ துண்டு
வேலையிலே களைப்பென்று சிறிதும் இல்லை
மேற்குமலை தந்த நதிக் கொடையினாலே

மாலையிலே மணற்பரப்பில் கவிதை பாடி
மனம் மகிழ்ந்தேன் நண்பர்கள் குழாத்தினோடே
வாலை அன்னை மீனாட்சி அருளைப் பெற்று
வாழிய இராசமணி தமிழே போன்றே.

கவியோகி பேகன்

# முன்னுரை

கல்வி தந்தை என்ற புகழ் பெற்றிருந்த சாத்தூர் K.C.A.D. சிதம்பரநாடார் அவர்கள் 8.6.75ல் மறைந்தார்கள். அவர் மரணம் திடீரென்று ஏற்பட்டது. அவர் இறப்பதற்கு முன்பு ஒரு நாள் என்னை அழைத்து சாத்தூரில் பள்ளி தோன்றிய வரலாறு பற்றி ஒரு புத்தகமாக எழுத வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்காக குற்றாலத்தில் என்னுடன் ஒரு வாரம் தங்கி இதற்கான குறிப்பை எடுத்துக் கொண்டு வரலாற்று புத்தகத்தை எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நான் இப்பணியை ஏற்றுக் கொண்டேன்.

K.C.A.D. சிதம்பரநாடார் குற்றாலம் பிரயாணத்திற்கு ஏற்பாடு நடந்தது. அவர்முன்னதாக செல்வது என்றும் நான் பின்னர் திரு. சங்கரஐயர் அவர்களுடன் ஒரு வாரம் கழித்து வரவேண்டும் என்றும் 6.6.75 ல் சொல்லியிருந்தார்கள்.

9.6.75 காலை அவர் குற்றாலம் புறப்படுவதாக திட்டம் ஒரு நாள் முன்னதாக இரவு 3 மணிக்கு அவர் மாரடைப்பினால் மரணமடைந்து விட்டார்கள். அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எனக்கும், திரு. சங்கரஐயர் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. இதன் பின்னர் திரு. சங்கரஐயர் அவர்களும் மறைந்து விட்டதினால் இதன் முழு பொறுப்பு என் மீது சுமத்தப்பட்டுவிட்டது.

வைப்பாறு பதிப்பகத்தார் இந்த சுமையை பகிர்ந்து கொண்டு வரலாற்றை எழுத எனக்கு ஊக்கம் அளித்தனர். காலச் சூழ்நிலையில் இப்புத்தகம் தாமதமாக எழுதப்பட்டு அச்சுக்கு வந்தது.

வரலாற்றை முழுமையாக எழுதி விட்டதாக என்னால் கருத முடியவில்லை. திரு. சிதம்பர நாடார் அவர்களை நேரில் வைத்து கொண்டு எழுதியிருந்தால் வரலாறு முழுமை பெற்றிருக்கும் என்று எனக்கு தோன்றுகிறது.

K.C.A.D. சிதம்பரநாடார் தனது தொழில் வர்த்தகத்துடன் தனது முதாதையர்களைப் போல் பொது நலப்பணியிலும் அக்கறை செலுத்தினார். அவற்றில் குறிப்பாக கல்விப்பணிக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்.

மன்னர்கள், குறுநில மன்னர்கள், பாளையக்காரர்கள், ஜமீன்தார்கள் ஆட்சியில் மக்கள் கொடுமைப்பட்டிருந்தனர். அரசுக்கு நிதி திரட்டுவதற்கு மக்களை கொள்ளையடித்தனர். இந்த அராஜக செயலை கண்டித்த சான்றோர்களை பழி வாங்கினர். ஆட்சியை அண்டி பிழைத்தவர்கள் மேலோர்களாகவும் கொடுங்கோன்மையை எதிர்த்தவர்கள் கீழோர்களாகவும் மதிக்கப்பட்டனர். கீழோர்களுக்கும் மேலோர்களுக்கும் சமநீதிக்காக போராட்டங்கள் நடந்தன.

கி.பி. 1851ல் சாமிதோப்பு அய்யா நாரயணசாமி சகாப்தம் தோன்றி மேல் குடி மக்களின் மனம் மாற நல்உபதேசமே மருந்து என்ற தத்துவத்தை வற்புறுத்தியது. "பொல்லாதவர்களை பகையாதே-பொறுமையோடு இரு-அடக்கம் பெரிது" என்று சான்றோர்களுக்கு நல்வழி கூறப்பட்டது.

இந்த சாத்வீக உபதேசம் காந்திய சகாப்தத்துக்கு ஒப்பானது,முன்னோடியானது. இந்த சாத்வீக கொள்கையை ஏற்று சான்றோர்கள் மேல் குடிமக்களின் மனதை மாற்ற பள்ளிகளை ஏற்படுத்தினர். அவைகள் கிராமங்கள் தோறும் திண்ணைப் பள்ளிகளாக நடத்தப்பட்டன.

அந்த முறையில் சாத்தூர் K.C.A.D. சிதம்பர நாடார் கல்விப்பணியை தனது பொதுநலப்பணியில் முன்னணியாக தேர்வு செய்து கொண்டது வியப்பானதல்ல.

நம்மனதை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். நம்முடன் நெருங்கி இருக்கிறவர்களின் மனதையும், ஆரோக்கியமாக்கியிருக்க வேண்டும். அதுதான் சிதம்பர நாடார் அவர்களும் அவர்களுடைய மூதாதையர்களும் கடைபிடித்த மார்க்கமாகும்.

இந்த நல்ல போக்கில் வாழ்ந்த சாத்தூர் சிதம்பர நாடார் அவர்களையும் இவர்களது மூதாதையர்களையும் அவர்களது வரலாற்றையும் நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பது எனது ஆசை.

வாழும் மனிதர்களுக்கு சிதம்பர நாடாரும் அவர்கள் மூதாதையர்களும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதும் எனது விரும்பம்

பா. இராஜாமணி



பா. இராஜாமணி
சாத்தூர்



## படைக்கின்றோம்

கல்விப் பணி செய்வது என்பது மகத்தான இயக்கம் கி.பி. 1857 லிருந்து தென் தமிழகத்தில் மலர்ந்து வருகிறது.

படியுங்கள் - பள்ளிக்கு போங்கள் - படிக்கச் செய்யுங்கள் பாடசாலை அமையுங்கள் என்பது இயக்கத்தின் நோக்கம். இதன் மூலம் மாக்களை மக்களாக்குவது என்பது இதன் பலன்.

இந்த இயக்கத்தின் முன்னோடிகள் சான்றோர்கள். தங்களுக்குள் வரி வசூலித்துக் கொண்டு இந்த மகமையிலிருந்து பள்ளிகளை துவக்கினர்.

இந்த உன்னத நோக்கத்தில் ஏழைகள் கூட வயப்பட்டனர். சிவகாசி அருகேயுள்ள மார்நெறிவிளாம்பட்டி கிராமத்தில் விதவையாக ஏழையாகயிருந்த சர்க்கரை நாடார் மனைவி மாரியம்மாள் தனக்கு குழந்தை குட்டியில்லாத நிலையில் தான் வசித்து வந்த வீட்டை அவ்வூரில் ஆரம்பித்து நடத்தி வந்த ஜார்ஜ் நாடார்கள் பாடசாலைக்கு தானமாக அளித்தார்.

பட்டி வீரன் பட்டி திரு. **W.P.A.** சௌந்திரபாண்டிய நாடார் இராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கு தலைவரானதும் சுற்றுப்பிரயாணங்களில் பள்ளி இல்லாத ஊரில் மக்களின் வரவேற்பை ஏற்று கொள்வதில்லை என்ற நிபந்தனையை வைத்திருந்தார்.

1928 ல் ஏழாயிரம் பண்ணைக்கு வந்திருந்த பாண்டியன் அவர்கள் அவ்வூரில் பள்ளியில்லாத குறையை கண்டு அவ்வூர் நாடார் மக்களின் வரவேற்பை நிராகரித்தார். அப்பொழுது அவ்வூர் நாடார் மக்கள் பள்ளியை ஆரம்பிக்க திட்டமிட்டு நாடார் மகமை பள்ளியை துவக்கி அதை ஆரம்பித்து வைக்க பாண்டியன் அவர்களை அழைத்து திறந்து வைக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியையும் நடத்தி விழாவை பூர்த்தி செய்தனர்.

பள்ளிளை ஆரம்பியுங்கள் - எல்லோரையும் படிக்க வையுங்கள் என்ற இயக்கம் இவ்வாறு பல கோணங்களிலும் வலுப்பெற்றது. இந்த மகத்தான சேவையில் கனஞ்சாம்பட்டியை சேர்ந்த குடும்பத்தினர் பாண்டி மண்டலத்தில் தலைமை ஏற்று செய்து வந்தனர். இவர்களில் மிக முக்கியமானவர் திரு. **K.C.A.** சிதம்பர நாடார் அவரது சகோதரர் ஞானகிரி நாடார் ஆகியோர்களாகும். விவசாயம் - வர்த்தகம் இவற்றுடன் இப்புனித சேவையையும் செய்து வந்தனர்.

இதை பரம்பரை பரம்பரையாக இன்னும் செய்து வருகின்றனர். இந்த வாரிசுகளில் திருவாளர் ஞானகிரி நாடார் குடும்பத்தில் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினரும் காந்திஜீயினால் ஹரிஜன சேவைக்கு நியமிக்கப்பட்ட பிரமுகருமான திருவாளர் **A.R.A.S.** துரைச்சாமி நாடார் அவர்களும். திருவாளர் **K.C.A.** சிதம்பரநாடார் குடும்பத்து வாரிசுகளில் திரு. **K.C.A.** அருணாசல நாடார் அவர் மகன் திருமிகு **A.** ஞானகிரி நாடார் **K.C.A.D.** சிதம்பர நாடார், அவரது தம்பி **K.C.A.D.**ஞானகிரி நாடார் ஆகியோர்களாகும்.

இவர்களது கல்விபணியை பற்றி வரலாற்றாக சாத்தூர் திரு. பா. இராஜாமணி கூறியுள்ளதை எங்கள் பதிப்பகத்திலிருந்து வெளியிடுகிறோம்.

சமூக சீர்திருத்தங்களில் தந்தை பெரியார் - அறிஞர் அண்ணா - கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர்களுடன் சேர்ந்து பங்காற்றியவர். சிறந்த எழுத்தாளர் - உயர்ந்த பேச்சாளர் - ஆற்றல் மிக்க தொண்டர் - நல்ல கலைஞர் - இலக்கியவாதி-செயல் ஆற்றல் மிக்க தலைவர் பா. இராஜாமணி

சமூக நூல்கள் - சிறுகதைகள் - வரலாறுகள் எழுதியிருக்கிறார். வைப்பாறு எனும் மாத இதழின் ஆசிரியராக இருந்தார். அவருக்கே உரித்தான நடையில் இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தை திரு. **K.C.A.** சிதம்பர நாடார் அவர்களின் ஆசியுடன் படிக்க இடம் கிடைக்காமல் தவித்த நாடார் குழந்தைகளை சேர்த்துக் கொண்டு திண்ணை பள்ளியை 1989ல் சாத்தூரில் ஆரம்பித்து நடத்திய வேலு வாத்தியார் என்ற புலவரின் குடும்பத்தினர்களுக்கும் எட்வர்ட் ஆரம்ப பாடசாலையில் 1910லிருந்து தலைமை ஆசிரியராக பணியாற்றிய திருவாளர்கள் டேவிட் பிள்ளை, **S.** ஜோசப் வாத்தியார், **A.S.**தேவசகாயம் அவர்களுடைய நினைவாகவும் காணிக்கையாக தமிழ் மக்களுக்கு படைக்கிறோம்.

அன்பர்கள்
**ச. அ. சீனிவாசன்**
**அ. கருணாகரன் B.A.**
**பேராசிரியர் D.V. செல்வின் M.A.,B.Ed.,**
**A.V.A.S.A. சந்திரன் B.A.**
**A. சதாசிவம் M.C.**
**உதவியாளர்கள்**

M. சந்திரசேகரன்
பொறுப்பாளர்
வைப்பாறு பதிப்பகம்
136, மன்னார்கோட்டை சாலை
சாத்தூர்-626 203

## கல்வியினால் மனிதநேயம் வளர்த்த பரம்பரையினர்

(ஆக்கியோன் பா. இராஜாமணி)

சாத்தூர் நகரை

சாத்தூரப்பனூர்

சாத்தானூர்

சாற்றூர்

தென் திருப்பதி என்று அழைப்போர்களும் உண்டு. இதற்கான காரணங்களும் சொல்வோர் உண்டு.

எவ்வாறு இருப்பினும் இந்த திருப்பெயருடன் சாத்தூர் கல் தோன்றி மண் தோன்றா காலத்தே தென் தமிழ்நாட்டின் மூத்த நகரமாக வரலாற்றில் இடம் பிடித்திருக்கிறது.

சாத்தூருக்குயென சிறப்பான வரலாறும் உண்டு. இது நமக்கெல்லாம் பெருமை அளிக்கிறது.

இவற்றில் வாழ்ந்த பெரியோர்கள், சான்றோர்களினால் மங்காத ஒளியுடன் சாத்தூர் திகழ்ந்து வருகிறது. வர்த்தகத்தில் சின்ன ரெங்கூனாகவும் விளங்கி வந்தது.

சாத்தூர் வைப்பாற்று வட கரையில் அமைந்த நகர் வைப்பாற்றுக்கு சமஸ்கிருதத்தில் "நிச்சாபநதி" என்று அழைக்கப்படும். "நிச்சாபநதி" என்றால் ஜீவநதி என்று பொருள். அதாவது உயிரோட்டமுள்ள பஞ்சமில்லாத ஆறு என்று அர்த்தம்.

சாத்தூரிலிருந்து மேற்கு தொடர்மலை 30 மைல்கள், கிழக்கே கடல்கரை 35 வது மைலில் இருக்கிறது.

மலை வளத்தை சூரியன் உதயமாகும் காலையிலும், சூரியன் மறையும் மாலை பொழுதும் சாத்தூரிலிருந்து காண முடியும்

கடலோரக் காட்சியை காண்பதும் கடினமல்ல. இரண்டு மணி நேர பிரயாணத்தில் அவற்றை காணலாம்.

திட்டமிட்டால் மேற்கு மலைத்தொடரிலிருந்து பழங்களும், கிழக்கே கடல்கரையிலிருந்து மீன் வளத்தையும் பெறமுடியும்.

சாத்தூரைச் சுற்றிலும் கரிசல் மண் பகுதி பருத்தியை விவசாயிகள் சாகுபடி செய்து வெள்ளைத்தங்கம் என்ற பருத்தியை விற்பனை செய்து வந்தனர்.

கை மணையினால் பருத்தியை அறைத்து விதையை பிரித்து பஞ்சை எடுக்கும் தொழிலை இவ்வூரைச் சுற்றி விரிவாக செய்து வந்தனர்.

இவற்றை விலைக்கு வாங்கி வெளியிடங்களுக்கு அனுப்பவும், எள் போன்ற எண்ணை வித்துக்களை வெளியிடங்களில் வாங்கி சாத்தூரில் மூடை மூடையாக குவித்து விற்று வந்த பெரிய வர்த்தகர்கள் ஏராளமானவர்கள் சாத்தூரில் இருந்தனர்.

1876 சனவரி மாதம் முதல் நாளன்று இவ்வூர் வழியாகத் தென்னிந்திய இரயில்வே கம்பெனியார் திருநெல்வேலிக்குச் செல்வதற்காக முதன்முதலாக வண்டியோட்ட தொடங்கி இரயில் பாதையை புதிதாக திறந்தார்கள்.

அது முதல் சாத்தூர் இரயில் பாதை முதன்மை பெறத்தொடங்கியது.

இரயிலில் ஏறுவோர் இறங்குவோர்களுக்காக ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் இவ்வூருக்குமிடையே கிட்டத்தட்ட இரண்டாயிரம் வில் வண்டிகள் ஓடி வந்தன. இவையாவும் இரட்டைக்காளை வண்டிகள், மோட்டார் வண்டிகள் இப்பாதையில் ஓடத் தொடங்கியதும் இவை வரவரக் குறையத் தொடங்கியது.

மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு இரயில் ஓடியதும் இவ்வழியில் உள்ள திருமங்கலம், பசுமலை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, நாலாட்டின்புதூர், கடம்பூர் இவ்வூர்களில் பருத்தி அறைக்கும் ஜின்னிங் பாக்டரிகளை வட நாட்டு முதலாளிகளும் வெளிநாட்டவர்களும், ஜப்பானியர்களும் நிறுவினர்.



சாத்தூரில் வடகோடியில் (விருதுநகர் நாடார்கள் மால் உள்ள இடத்தில்) சபாபதி முதலியார் ஜின்னிங் பாக்டரி முதலில் ஏற்பட்டது. அது முதல் சாத்தூரில் பஞ்சு வியாபாரம் என்ற தொழில் தொடங்கி உச்ச நிலைக்கு வந்தது.

அதன் பின்னர் ஆர்.வி. டயமன் கம்பெனி, பாம்பே கம்பெனி, ராலி பிரதர்ஸ், ஜப்பான் காட்டன்,டோயா மின்ட் வா ஹெய்ஸா கம்பெனி இவ்வாறு பல பருத்தி அரைக்கும் ஆலைகளும், பேல் கட்டுக்கள் போடும் தொழிற்சாலைகளும் 1880லிருந்து ஏற்பட்டன.

பாரி அன்கோவின் கருப்பட்டி பாவினால் சீனி தயாரிக்கும் தொழிற்சாலையும் மாடுகளின் எலும்புகளை தூளாக்கி பிற பொருட்களில் கலக்கும் தொழிற்சாலையும் நிறுவப்பட்டன. வெல்லச் சுத்திகரிப்பு ஆலையும் துவக்கப்பட்டன.

1881 லிருந்து மண்ணெண்ணை கிடங்குகள் இரயிலடியை ஒட்டி அமைக்கப்பட்டது. இவ்வாறு வெளிநாட்டு நிறுவனத்தினரால் ஐந்து பாதுகாப்பான கிடங்குகள் நிறுவப்பட்டன. நாள் தோறும் 5000 டின்கள் வரை சில்லரையாக இவற்றிலிருந்து விற்பனை செய்யப்பட்டன. பெட்ரோல் கிடங்கும் அமைக்கப்பட்டன. பெஸ்ட் அண்ட் கம்பெனிதான் முதலில் ஆரம்பித்த மண்ணெண்ணை கிடங்கு.

இந்த நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் ரெயில்வே வாகனங்களிலிருந்து சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் தனியாக ரெயில் நிலையத்திலிருந்து இணைப்பு இருப்புப் பாதைகள் போடப்பட்டன.

நாள்தோறும் ஆயிரக்கணக்காக பஞ்சு, பருத்தி மூடைகள் இவைகளிலிருந்து ஏற்றி வெளியிடங்களுக்கு செல்லப்பட்டன.

அது போலவே ஆயிரக்கணக்கான நவதானிய மூடைகள் சாத்தூர் பஜாரில் விற்பனை செய்வதற்காக வாகனங்களில் இறங்கின.

பொருட்களை வாகனங்களில் ஏற்றவும், இறக்கவும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நகரில் இருந்தனர். கை வண்டிகள் மாத்திரம் ஆயிரத்துக்கும் அதிகமாகவே இருந்தது.

விவசாயிகள் பேரம் பேசி விற்பதற்காக பருத்தி மார்கெட்டுகள் தோன்றின. இங்கு வரும் பருத்திகளை விலைக்கு வாங்கி ஜின்னிங் பாக்டரிகளின் மனைகளில் கொடுத்து அறைத்து விற்பனை செய்ய வெளிநாட்டு தொழில் அதிபர்களும், வட நாட்டு முதலாளிகளும் தமிழ்நாட்டு வர்த்தகர்களும் சாத்தூரில் பல நிறுவனங்கள் துவக்கினர்.

இவைகளையடுத்து கழிவுப்பஞ்சு, பருத்தி விதைகளை விலைக்கு வாங்கி வெளிநபர்களுக்கு விற்பனை செய்யும் கிடங்குகளும், சாக்கு, தாட்டு வியாபாரக் கூடங்களும் பெருகின.

நாள் தோறும் ஆயிரக்கணக்கில் மாட்டு வண்டிகளில் சாத்தூர் மார்க்கெட்டுக்கு பருத்தி மூடைகள்,மல்லி, உளுந்து, மிளகாய் வத்தல், வெங்காயம், கம்பு, கேப்பை தானியங்களையும் ஏற்றிக்கொண்டு வந்தனர். கிழக்கே கடல்கரையிலிருந்து (கடலாடி) மேற்கே மலை வரை (இராஜபாளையம்) தெற்கே (சங்கரநாயினார் கோயில்) தென் கிழக்கே (தட்டப்பாரை) வரையிலும் விரிந்து பரந்த நிலப்பரப்புகளிலிருந்தும் வண்டிகளில் சரக்குகள் வந்த வண்ணமாகயிருக்கும்.

விலைபொருள்களை விவசாயிகள் சாத்தூர் சந்தையில் விற்று அவற்றில் கிடைத்த பணத்தில் அரிசி, மொச்சை, பருப்பு, கருப்பட்டி, எண்ணை முதலான பொருள்களை வாங்கி வண்டிகளில் ஏற்றிக் கொண்டு கிளம்புவர்.

இதற்காக சாத்தூரில் பல மொத்த வியாபாரிகளின் கூடங்களும் அமைந்திருந்தன. எல்லாம் தை மாதத்திலிருந்து ஆவணி மாதம் வரை தான் வியாபாரம். சந்தைக்கடை மாதிரிதான்.

இம்மாதிரியான சீஷன் காலத்தில் சாத்தூர் திருவிழா கோலம் பூண்டு பார்ப்பதற்கு ரம்மியமாக இருக்கும். ரெயில் வரும் நேரத்தில் இருக்கங்குடி செல்லும் சாலையில் ரெயில்வே கதவு சாத்திவிட்டால் இருபக்கங்களிலும் கதவு திறக்கும் வரையிலும் ஆயிரக்கணக்கான வண்டிகள் நின்று கொண்டிருக்கும். சில சமயத்தில் ரெயில்வே பீடர் ரோட்டில் மூன்று லாந்தல் முக்கு வரையிலும் வண்டிகள் நிற்கும்.





பாண்டிய மண்டலத்தின் மாமனிதர்
K.C.A. சிதம்பர நாடார்

இதையெல்லாம் கணக்கிட்டுத்தான் சாத்தூரை சின்ன ரங்கூன்,சின்ன கொழும்பு என்று தென்புலத்து மக்கள் அழைத்து வந்தனர்.

இந்த இரண்டு நகரங்கள் தான் அக்காலங்களில் தமிழர்களுக்கு வாழ்வளித்து வந்த நகரங்களாகயிருந்தமையினால் அந்நகர்களுக்கு ஒப்பிட்டு சாத்தூரையும் தென்புலத்து மக்கள் அழைத்து வந்தனர். அப்பொழுது சாத்தூர் வந்திருந்து சாத்தூரின் செல்வச் செழிப்பை கண்ணுற்ற வேற்றூர் புலவர் ஒருவர்

வேற்றூர் அரிசியும், விறகும்

காய்கறியும் உண்டானால்

சாத்தூரைப் போலுண்டா சௌகரியம்

என்று பாடி வைத்து விட்டுச் சென்றார்

வெளியூர்களிலிருந்து அக்காலத்தில் ரெங்கூன் அரிசி, மொச்சை, வடநாட்டிலிருந்து பருப்பு வகைகள், வெளியிடங்களிலிருந்து விறகும், காய்கறியும் சாத்தூருக்கு வந்து குவிந்து கொண்டிருந்தது. ஆற்றில் ஒன்பது மாதங்களும் குளிப்பதற்கு தண்ணீர். வேலை செய்தால் கையில் பணம். இவ்வளவு இருக்கும் பொழுது சாத்தூர் சௌகரியமான இடமல்லவா?

இதைத்தான் அப்புலவன் பாடினான். சாத்தூர் என்றவுடன் அக்காலத்தில் இப்பாடலைத்தான் பாடிக்காட்டுவார்கள் தென்புலத்து தமிழ்மக்கள்.

இவ்வளவு வளமை பெற்ற சாத்தூருக்கு 1884 ல் சிவகாசியிலிருந்து பிரபல குடும்பத்தில் பிறந்து க.சொ.அ. சிதம்பரநாடார் என்பவர் குடியேறி நவதானியக் கடை ஒன்றை ஆரம்பித்தார். அவரது சாத்தூர் வருகை தான் சாத்தூர் நகரில் நிரந்தர பஜாரை ஏற்படுத்தியது. 1853 ல் சிவகாசியில் பிறந்தார். அவரது பூர்வீகம் சிவகாசிக்கு தெற்கே சாத்தூருக்கு மேற்கேயுள்ள கனஞ்சாம்பட்டி என்ற கிராமம்.

1870 ல் அவருக்கு திருமணம். அப்பொழுது அவருக்கு வயது 17.

சிவகாசியில் அவரது தகப்பனார் ஆப்காரி காண்டிராக்ட் நடத்திக்கொண்டிருந்தார். பின்னர் தூத்துக்குடியில் உப்பு வியாபாரத்தை துவக்கினார். நல்ல லாபம் கிடைத்தது.

சாத்தூர் நவ தானிய வியாபாரம் மிகுந்த லாபத்துடன் ஓடியது. நவதானியக் கடையுடன் பருத்தி வியாபாரமும் தொடங்கினார் திரு. சிதம்பர நாடார்.

இவரது சகோதரர் பெயர் ஞானகிரி நாடார். அவர் சிவகாசியிலுள்ள வர்த்தகத்தை கவனித்துக் கொண்டிருந்தார்.

சிவகாசி நகரம் 1821 ஆம் ஆண்டு முதல் சிறப்பு பெற்ற நகரமாக மாறி வந்தது. தாமஸ் டர்ன்புல் (Thomas Turnmbull) என்ற ஆங்கிலேய நில அளவாயர் சிவகாசி நகரத்தைப்பற்றி கீழே கண்டவாறு எழுதுகிறார்.

"சிவகாசி தலை சிறந்த ஒரு வியாபார ஸ்தலமாகும். இந்தநகரம் முக்கியமாக நாடார்களால் குடியேற்றமாகியிருந்தது. அவர்கள் சிறந்த முறையில் வர்த்தகம் செய்து வந்த காரணத்தினால் நாடிகல்கள் (NADDIKALS) என அழைக்கப்பட்டு வந்தனர். இவர்கள் புகையிலை, பருத்தி ஆகியவற்றில் விரிவான வர்த்தகத்தை மேற்கொண்டிருந்தனர். திருவாங்கூர் மாநிலத்தில் தங்களது புகையிலை ஏற்றுமதி செய்வதற்கென மட்டும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாட்டு வண்டிகளைப் பயன்படுத்தி வந்தனர். இவ்வினத்தில் உள்ள சிறு வியாபாரிகள் தங்களிடமுள்ள பருத்தியை பண்டமாற்று முறையில் கொடுத்து மட்பாண்டங்களையும், மூங்கில் கூடைகளையும் பெற்று வந்தனர். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் கூடும் வாரச்சந்தையிலும் பருத்தி நூல், நெல் போன்ற பலவகைத் தானியங்கள், கருப்புக்கட்டி, கருவாடு, மூங்கில் கூடைகள், நெய், மீன் வலைகள், பழவகைகள் போன்ற ஏராளமான பொருட்கள் வியாபாரப் பொருட்களாக வந்தன என்று தாமஸ் டர்ன்புல் கூறுகிறார்.

பேட்டைகள் தவிரக் கிழக்கிந்திய கம்பெனியின் பருத்தியை பாதுகாப்பதற்காக வர்த்தக கிட்டங்கி ஒன்று அமைக்கப்பட்டது. நெருங்கி வாழும் மக்களின் வசதிக்காகவும், அருகிலுள்ள கிராமப்புற மக்களின் வசதிக்காகவும் நீண்ட கடை வரிசைகளில் ஏராளமான தானிய வகைகளும் மற்றுமுள்ள பொருட்களும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மேலும் சிவகாசியில் நாடார் குல மக்கள் சொந்தமாகக் கோயிலைக் கட்டினார்கள். வசதி படைத்த வியாபாரிகள் பிரயாணிகள் தங்குவதற்கென விடுதிகளையும் அமைத்தனர்.



பேட்டையைத் தங்கள் வசதிக்காகப் பயன்படுத்தும் ஒவ்வொரு வியாபாரியும் தனது வருமானத்தின் ஒரு பகுதியைப் பொது நல நிதி அல்லது மகமைக்கு (இலக்கிய வழக்கில் உள்ள மகிமை என்பது புகழ் என்று பொருள் தரும்) வழங்க வேண்டியிருந்தது. காலப்போக்கில் சிவகாசி நகரம் வளர்ச்சியடைந்த போது அந்நகரத்தில் வசித்து வந்த வர்த்தகர்களும் வியாபாரிகளும் மகமை நிதி வழங்கி வந்தனர்.

சிவகாசியில் நாடார்கள், நாடார்கள் அல்லாதவர்களிடமிருந்தும் மகமைக்கு நிதியுதவி பெற்றனர். நகரின் வழியாகக் கடந்து செல்லும் மாட்டு வண்டிகளின் மீதும் விதிக்கப்பட்ட மகமை நாடார் குலக் கருவூலங்களில் சேர்க்கப்பட்டன. இவ்வாறு கிடைத்த நிதியின் மூலம் தமிழ்நாட்டிலும் திருவிதாங்கூரிலுமாகத் தொண்ணூற்றாறு நகரங்களிலும், கிராமங்களிலும் வியாபாரிகளின் வசதிக்காக சிவகாசி நாடார் குல மக்கள் பேட்டைகளை அமைத்தனர்.

இவ்வாறு தாமஸ் டர்ன்புல் எழுதினார். சிவகாசி அப்பொழுது திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அச்சமயம் ஜில்லா கலெக்டராகயிருந்த திரு. ஆர்.கே. பக்கிள் (Puckle) 1877ல் இவற்றை புத்தகமாக வெளியிட்டு அரசாங்க விவரச்சாவடியில் பாதுகாப்பாக வைத்தார்.

இத்தகைய சிறப்பு பெற்ற சிவகாசி நகரிலிருந்து தான் சிதம்பர நாடார் சாத்தூரில் குடியேறுகிறார். 1880 முதல் 1890 வரை சிவகாசியின் முக்கியத்துவம் குறைந்து கொண்டிருந்த காலம் அது.

அவரது பூர்வீக கிராமமான கனஞ்சாம்பட்டியிலிருந்த சில தலைமுறைக்கு முன்னர் தான் மூதாதையர்கள் சிவகாசியில் குடியேறியிருக்க வேண்டும்.

சிவகாயிலிருந்து எட்டு மைலுக்கு தெற்கேயும்,

சாத்தூரிலிருந்து பத்துமைலுக்கு மேற்கேயும், வெம்பக்கோட்டைக்கு மூன்று மைலுக்கு கிழக்கேயும், வைப்பாற்றுக்கு இரண்டு மைலுக்கு வடக்கேயும் அமைந்துள்ளது தான் இந்த கிராமம்.

அக்கிராமத்தை கண்ணுற்றால் நிலச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை பெருமளவில் அங்கு மிகுந்திருக்க வேண்டும். சீமான்களாயிருந்த நாடார் குடும்பங்களும் கனஞ்சாம்பட்டியில் வசித்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

மேம்பட்ட முறையில் உழவுத் தொழில் செய்திருக்கின்றனர். மிளகாய், வெங்காயம் போன்ற தோட்டப் பயிர்களை விளைவித்தனர். உழவுத் தொழில் செய்வதற்கு ஒவ்வாத பாறைகளான இடத்திலும் தோட்டங்களாக்கி ஆழ்கிணறு தோண்டி நீர்ப்பாசனம் செய்து வந்தனர்.

நிலத்தடி நீராய் இருந்தாலும் அதைக் கண்டுபிடித்து பாழ்பட்ட நிலத்தை பச்சை பசேலென்ற தோட்டமாக விரைவாக மாற்றியமைப்பதில் நாடார்கள் நிகரற்றவர்கள் என்று பேட் என்ற ஆங்கிலேயர் நாடார்களின் உழைப்புத்திறன் பற்றி குறிப்பிட்டபடி கனஞ்சாம்பட்டியில் வசித்த சிதம்பர நாடாரின் மூதாதையர்கள் பச்சைப் பசேலென காட்சியளிக்கும் வண்ணம் தரிசாக இருந்த நிலங்களை பசுந் தோட்டங்களாக்கி வளமுள்ளதாக்கியிருந்தனர்.

கோடை காலங்களில் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போனால் காய்கறித் தோட்டங்களுக்கு நீர் இறைத்துப் பாதுகாத்தனர். இவ்வாறு காய்கறிகள், வாழைப்பயிர்கள் மட்டுமல்லாமல் நெற்பயிருக்கும் தண்ணீர் இறைத்துக் குளங்களைச் சுற்றிலும் பசுமையும் வளமுற்ற தோட்டங்களை நாடார்கள் அமைத்தனர் என்று பேட் கூறுவதைப் போலவே கனஞ்சாம்பட்டியில் நடந்தது.

பேட் எழுதிய குறிப்பு திருநெல்வேலி மாவட்ட அரசாங்க விவரச் சாவடியில் பக்கம் 128,129 இருக்கிறது.

வீரமும், நெஞ்சுறுதியும், நேர்மையில் நாட்டமும், நீதியில் கவலையும், மனிதாபிமானத்தில் அக்கரையும் உள்ளவர் சிதம்பர நாடார்.

சாத்தூரில் தான் வசிப்பதற்கு வீடுகள் கட்டினார். வர்த்தக



கிடங்குகளை சொந்தமாக அமைத்தார்.

தமிழ்நாடு அந்தநாளில் ஜாதி வித்தியாசத்தால் தலை குனிந்திருந்தது. சாத்தூர் அதற்கு விதிவிலக்கல்ல.

நாம் குறிப்பிடும் 1884ம் ஆண்டு சாத்தூர் நெல்லை மாவட்டத்தில் இருந்தது. ஆனால் வருவாய்த்துறை இலாகாவின் சப் டிவிஷன் தலை நகராகயிருந்தது. சாத்தூரில் ஐ.சி.எஸ். அதிகாரிகள் 1914 வரை சப் கலைக்டராக இருந்திருக்கிறார்கள். 1907 ல் திரு. N. கோபால் சாமி ஐயங்கார் சாத்தூர் சப்கலைக்டாராகயிருந்தார்.

தற்போதுள்ள துணை குற்ற தீர்ப்பு மன்றம் (Sub Magistrate Court) இருக்கும் கட்டிடமே சப் கலைக்டர் அலுவலகமாகும்.

தமிழ்மக்கள் தாங்கள் ஆண்ட தரணியில் தாசனாகித், தரித்திரனாகித் தன்னை மறந்தவனாகி, சாதிபேதம் பாராட்டி , சகோதரச் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த நிலை சாத்தூரிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் இருந்தது. நாடார் சமூக மக்கள் இழிபெயரிட்டு அழைக்கப்பட்டனர். ஊரில் குடியிருக்க ஒதுக்கிடமே கிடைத்தது...

உண்டியில், சாலைகளில், நாடக அரங்குகளில் நாடார்கள் மானம் கெடும் விதத்தில், ஓரத்திலே இருக்கச் செய்து, சில இடங்களிலே உள்ளே நுழையவே அனுமதி மறுத்து, இவர்களது நிழலும் புனிதத் தன்மையை கெடுத்து விடும் என்ற நினைப்பிலே பல நிகழ்ச்சிகள் நடந்து அவைகள் திரு. க.சொ.அ. சிதம்பர நாடார் மனத்தை உறுத்தின.

சாத்தூருக்கு வந்தோம். வர்த்தகம் செய்தோம். பணத்தை சேமித்தோம். சிவகாசியில் கொண்டு போய் குவித்தோம். குழந்தை குட்டிகளோடு குஷியாக வாழ்ந்தோம் என்ற நிலையில் அவர் இருக்கவில்லை.

தான் பிறந்த சமுதாயம் மானத்தோடு மரியாதையோடு தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்று நினைத்தார். நாடார் சமுதாயத்தை கேவலமாக இழிபெயரிட்டு மற்றவர்கள் அழைப்பதைக் கேட்டுப் பொருமினார்.

அதற்கு ஏற்றார்போல் அவர் அவமானம் அடையும் நிகழ்ச்சி யொன்று நடந்தது.

ஒரு நாள் ஏழாயிரம் பண்ணை சென்று பருத்தியை விலைக்கு வாங்கி எடைபோட்டு வண்டியில் ஏற்றி விட்டு இரவு 12 மணிக்கு கால் நடையாக அலுப்புடன் சாத்தூர் திரும்பி வந்தார்.

வயிற்று வலி அவரை துன்புறுத்தியது. கடையில் வேலை பார்ப்பவரை அனுப்பி சுக்கு வாங்கி வருமாறு கட்டளையிட்டார்.

அவ்வேலையாள் நாட்டு மருத்துக் கடைக்குச் சென்று கடைக்காரரை எழுப்பி சுக்கு கேட்டார்.

அக்கடை முதலாளி விழித்து கடையைத் திறந்து, வெளிச்சம் போட்டு காசை வாங்கிக் கொண்டு சுக்கை எடுக்கும் பொழுது சுக்கு யாருக்கு? என்று கேட்டார்.

சிதம்பர நாடாருக்கு என்று வேலைக்காரர் சொன்னார்.

சுக்கு இல்லை என்று சொல்லிவிட்டார் கடைக்காரர்

சிதம்பர நாடாருக்குத்தான் சுக்கு, கொடுங்கள் என்று மீண்டும் கேட்டார் சிதம்பர நாடாரின் வேலைக்காரர்.

யாருக்காக இருந்தால் என்ன? சுக்கு இல்லை என்று கடைக்காரர் கோபத்துடன் சொல்லி, விளக்கை அணைத்து கடையை மூடி விட்டார்.

இதை வேலைக்காரர் திரு. சிதம்பர நாடாரிடம் வேதனையாகவும், பயத்துடனும் சொல்லிவிட்டார்.

அன்று இரவு பூராவும் கடும் வயிற்று வலியினால் துன்பப்பட்டு கண்களையும் மூடாமல் வயிற்றை இருகப் பிடித்துக் கொண்டு கடும் தவம் இருந்தார் சிதம்பர நாடார்.

அன்று போதி மரத்தடியில் தவமிருந்த புத்தனுக்கு மனித துன்பத்தைத் துடைப்பதற்கான வழி புலப்பட்டது போல சிதம்பர நாடாருக்கும் ஓர் உண்மை புலப்பட்டது.

மனிதன் மனிதனை அடிமைப்படுத்துவதைத் தடுத்தாக



வேண்டும். இதற்கு மருந்து மனிதன் தன்னை மனிதனாக்கிக் கொள்வதே

அந்த இருட்டில் அந்த தனிமையில் அந்தப் பயங்கர வேளையில் உலகமே உறங்கும் நள்ளிரவில் சிதம்பர நாடார் விழித்துக் கொண்டிருந்தார்.

மனிதனின் உரிமைகள் இனி களவு போக முடியாது பிறர் நம்மை அடக்கக் கூடாது என்ற எண்ணம் அன்றிரவு அவருக்கு உருவானது.

நாடார்களைக் கொண்டு சாத்தூரில் பஞ்சுக் கடைகள் மாத்திரமல்ல எல்லா பொருட்களையும் விற்கக் கூடிய கடைகளை நடத்த வேண்டும். அவர்களுக்கு தேவையான பொருள்களை பிறரைக் கெஞ்சி பெறும் நிலைமையில்லாமல் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டார்.

சாத்தூரில் கீரை பயிருடும் விவசாய குடும்பத்தினர்களும், பனைத் தோட்டத்திற்கு சொந்தகாரர்களுந்தான் பூர்வீகமாக வசித்து வந்த நாடார்கள். எனவே அவர்களை வியாபாரத்தில் ஈடுபடுத்த இயலாது.

சிதம்பர நாடார் மறுநாள் காலை சிவகாசி சென்றார். பலரை சந்தித்தும் சாத்தூரில் வர்த்தகம் நடத்தும்படி அழைப்பு கொடுத்தார். இவ்விதம் வருபவர்களுக்கு பண உதவி செய்வதாகவும் வாக்களித்தார்.

சாத்தூருக்கு குடும்பத்தின் நலனுக்காக வியாபாரம் செய்ய வந்த சிதம்பர நாடார் சமூகத்தினர் சிறுமையை போக்குவதில் முனைந்து விட்டார்.

நூறு குடும்பங்களை சிவகாசியிலிருந்து தருவித்து அவர்களுக்கு கடைகள் அமைக்க இடம் கொடுத்து பணமும் கொடுத்தார். சாத்தூரில் எக்காலமும் நடைபெறும் நிரந்தரமான பஜார் அப்பொழுதுதான் தோன்றுகிறது.

இரும்பு, மரம், பலசரக்கு, ஜவுளி, ஷாப்,புகையிலை, கருப்பட்டி, எண்ணெய்,காய்கறி,தேங்காய்,பழம்,கடலை,

இவர்களையெல்லாம் இணைத்து தனக்குத்தானே வரி விதித்துக் கொள்ளும் மகமையை நாடார்களுக்காக ஆரம்பித்து உறவின் முறை சங்கத்தை சாத்தூரில் துவக்கினார். முதலில் சிவகாசி நாடார்கள் என்ற பெயரில் துவக்கி பின்னர் அவற்றை சாத்தூர் நாடார்கள் பொது உறவின் முறையாக்கினார்.

மகமைக்கு சொந்தத்தில் கட்டிடம் கட்டினார். கட்டும் பொழுதே திட்டமிட்டு செயல்பட்டார்.

சாத்தூர், சிவன் கோவிலை மையமாகக் கொண்டு நாற்புறமும் அகண்ட வீதிகளும், நாற்சந்தி அமைப்பும் கொண்டு நாகரீகம் வாய்ந்த நகரமாயிருந்தது.

பூந்தோட்டமும், அதன் மத்தியிலே அழகிய குளமும், நாற்புறமும் அழகிய படிகட்டுகளும், களங்கமற்ற நீல நிறத் தண்ணீரிலே வெள்ளை சிவப்புத் தாமரைகள் மலர்ந்து சோபிதமான சுகந்தபுரியாக காட்சி அளித்தது.

இச் சிதம்பரேசுவரர் ஆலயத்தின் வடக்குரத வீதியில் ஒரு வாசலும், மெயின் பஜாரில், ஒரு வாசலுமாக அமைத்து நாடார்கள் மகமை கட்டிடத்தை கட்டினார்.

சிதம்பரரேசுவரர் ஆலய ரத வீதிகளில் அக்காலத்தில் நாடார்கள் வரக் கூடாத காலம் அது. அத்தீண்டாமையை ஒழிப்பதற்காகவே ரத வீதியில் மகமை கட்டிடத்தின் தெற்கு வாசலை அமைத்தார். அதன் மூலம் அந்த வீதியில் நாடார்கள் வந்து போயினர்.

மகமை கட்டிடத்தில் கிணறு, சமையல் அறை, பாத்திரங்கள் எல்லாம் இருந்தன. கிராமத்திலிருந்து சாத்தூர் வரும் நாடார்கள் இங்கு உணவு சமைத்து உண்டு ஓய்வெடுத்து செல்வர். பணம் வைத்திருந்தால் மகமை கட்டிடத்திலுள்ள இரும்பு பெட்டியில் பாதுகாப்புக்காக வைத்திருக்கச் செய்வர்.

நாள்தோறும் மகமைக்கு வியாபாரிகள் தாங்களாகவே இரவு கடையை மூடுவதற்குள் மகமையை செலுத்தி ரசீது பெற்றுக் கொள்வர். அதற்கு முன்னர் மகமை கணக்கர் ஒருவர் பஜார் முழுவதும் சென்று மகமை போடுங்கய்யா என்று கடை முன் நின்று



கொள்வர். அதற்கு முன்னர் மகமை கணக்கர் ஒருவர் பஜார் முழுவதும் சென்று மகமை போடுங்கய்யா என்று கடை முன் நின்று சொல்லிக் கொண்டே போவார். நகராவும் மகமை கட்டிடத்திலிருந்து அடித்து அறிவிக்கப்படும். நகராவின் ஒலி நகர் முழுவதும் கேட்கும். சாதாரணமாக இரவு 9 மணிக்கு இவ்விதம் நகரா அடிக்கப்படும்.

நாடார்களுக்கு தகனம் செய்ய அடக்கம் பண்ண தனியாக மயானம் அமைக்கப்பட்டது.

தண்ணீர் தர்மப்பந்தலை அமைத்து எல்லா மக்களுக்கும் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டது.

மற்ற சமூக மக்களும் இவ்விதம் தண்ணீர் பந்தல் அமைந்திருந்தனர். அங்கு நாடார்களுக்கு தண்ணீர் கொடுக்கமாட்டார்கள். அப்படி வழங்கினாலும் இரண்டு கையையும் ஏந்தச் செய்து அவற்றில் தண்ணீர் ஊற்றுவார்கள்.

சாத்தூரில் பிரபலமாகவுள்ள சிவன் கோவில், பெருமாள் கோவில்களில் நாடார்கள் நுழைய முடியாது. எனவே நாடார்களுக்காக மாரியம்மன், பத்திரகாளியம்மன் கோவிலை சிதம்பர நாடார் அமைத்தார்.

அவற்றில் பூஜை செய்வதற்காக புலமை பெற்ற நாடார்களை சிவகாசியிலிருந்து அழைத்து வந்து கோயில்களில் பூஜை நடத்தச் செய்தார். அவர்களுக்கு ஞானியர் என்ற பட்டத்தை சூட்டினார். அவர்கள் குடுமி வைத்து, மடிசார் கட்டி பூணூலும் போட்டுக் கொள்ளச் செய்தார்.

பின்னர் தான் பண்டாரங்களை பூசாரிகளாக்கினார். பிராமண பூசாரிகள் நாடார்கள் கோயில்களில் பணி விடை செய்ய முன்வரத் தொடங்கினர்.

வைப்பாற்று கரையில் பல நந்தவனங்கள் இருந்தன. அவைகளையெல்லாம் ஒவ்வொரு சமூகத்தார்களுக்கும் சொந்தமாக்கி அவைகளில் அச்சாதியினர்களே குளித்து வந்தனர். அங்கு நாடார்கள் குளிக்க முடியாது.

எனவே சிவகாசி செல்லும் சாலையில் பத்திரகாளியம்மன் கோயிலைச் சுற்றி நாடார்களுக்கு நந்தவனம் அமைத்தார் சிதம்பரநாடார்.

பெண்கள் ஆற்றில் தனித்தனியாக மணலில் ஊற்றுத் தோண்டி குடிநீர் எடுத்து வருவது அக்காலத்து வழக்கம். நாடார் பெண்கள் தண்ணீரைத் தலையில் எடுத்துச் செல்லாமல் இடுப்பில் தான் எடுத்துச் செல்லவேண்டுமென பணித்தார். மேல் சாதிப் பெண்கள் தான் இடுப்பில் தண்ணீர்ப் பானைகளை எடுத்துச் செல்ல வேண்டுமென வழக்கத்தில் இருந்தது அப்பொழுது.

திருமண ஊர்வலங்களின் போது பல்லக்குகளைப் பயன்படுத்துவதை பழக்கமாக்கி நாடார் உறவின் முறையிலிருந்து பல்லாக்கு வாங்கி வைத்தார்.

குழந்தைகள் பெற்றால் அவர்களுக்கு பெயர் சூட்டும் பொழுது அசிங்கமான பெயரை சூடாமல் பார்த்துக் கொண்டார். குஸ்தி, சிலம்பு போன்ற உடற்பயிற்சி பள்ளிகளையும் நாடார்களுக்காக அமைத்தார். திருமணம் போன்ற சடங்குகளின் போது நாடார்களுக்கு வாத்தியம் வாசிக்க கூடாது என்ற நிலை வந்த போது ஆலயத்திற்கும், திருமணம் போன்ற சடங்குகளுக்கும் இசை வாசிக்கக் கூடியவர்களை தனியாக அழைத்து வந்து குடியமர்த்தி வைத்தார்.

மரணம் போன்ற காலங்களில் ஈமச்சடங்கு நடத்த நந்தவனம் தேவையாகயிருந்தது. அதற்காக பெருமாள் கோவில் தெற்கு ரதவீதியில் ஆற்றுக்கரையில் நாடார்களுக்காக நந்தவனம் அமைக்க இடம் வாங்கச் செய்தார்.

நாவித தொழிலுக்கு என்று வெளியூர்களிலிருந்து பல குடும்பங்களை வரவழைத்து அவர்களுக்கு இருப்பிடம் கொடுக்கச் செய்தார். உறவின் முறை கூட்டத்தின் அழைப்பு போன்ற காரியங்களையும் இந்த நாவிதர்கள் செய்து வந்தனர்.

நாடார்களின் சமூக நலன் காக்க ஒற்றுமையையும், ஒழுங்குமுள்ள இயக்கத்தை சிதம்பர நாடார் சாத்தூரில் ஆரம்பித்து வெற்றி வாகை சூடிவிட்டார். சமூக ஒற்றுமையின் உயர்வுக்காக, சமூக இயக்கமே முழு அங்கீகாரம் பெற்ற இயக்கமாகச் செயல்பட்டு



விட்டது.

அரசாங்க அதிகாரிகளோடு நாடார்களுக்கு முழுத் தொடர்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார் சிதம்பர நாடார். ஏனைய சமூகத்தினரோடு பொதுவான தொடர்பை வைத்துக் கொள்ளச் செய்தார்.

நாடார்களில் இவருக்கு பக்கபலமாகயிருந்தது பஞ்சு வர்த்தகர் திரு. அ.மா. மகாலிங்க நாடார் அவர்களாகும். இளைஞர்களில் திரு. கே.சி.ஏ. கருப்பண்ண நாடார் ஆகும். சாத்தூரில் சப் கலைக்டர் அலுவலகம் ஏற்பட்டதும் சப் கலைக்டராக வரும் ஐ.சி.எஸ். அதிகாரி எல்லாம் ஆங்கிலேயர்களாகவே வருவர். அவர்களில் திரு. ஈ. டபிள்யூ. லீயூ சிதம்பர நாடாருக்கு மிகவும் நெருங்கிய நண்பர்.

ஏ. அண்ட ஆப் ஆர் வி கம்பெனியின் நிர்வாக டைரக்டரான திரு. பிராங் ஹார்வியும் அவரது துணைவியாரும் சாத்தூரின் பிரபல பஞ்சு வர்த்தகரான சிதம்பர நாடாருடன் நீண்ட தொடர்புள்ளவர்.

அவர்கள் சப் கலைக்டர் லீயூ. ஐ.சி.எஸ்.க்கும் சிதம்பர நாடாருக்கும் உறவாக்கி பிரிக்க முடியாத நண்பர்களாக்கி விட்டனர்.

ஐ.சி.எஸ். சப் கலைக்டர் குடியிருப்பதற்கு சாத்தூரில் நல்ல வீடு கிடையாது. ஆற்றோரமுள்ள முசாபரி பங்களாவில் தங்கி வந்தார். சில சமயம் கலெக்டர் அலுவலகத்திலேயே குடியமர்ந்திருந்தார்.

அவருக்கு வசதியான வீடு அமைத்துக் கொடுப்பது சிதம்பர நாடாரின் கடமையாகி விட்டது. பாரி அன் கோவின் சீனி தயாரிக்கும் தொழிற்சாலை கட்டிடத்தை பஞ்சு வர்த்தகர் மகாலிங்க நாடார் விலைக்கு வாங்கியிருந்தார்.

அதன் வளாகத்திற்குள் பாரி அன் கோ வெள்ளைக்கார மானேஜர்கள் தங்குவதற்கான பங்களா இருந்தது. அதை நிலைமைக் ஏற்ப மாற்றி அமைத்து பங்களாவை சுற்றி தோட்டங்கள் ஏற்படுத்தி, குதிரைகளை கட்டுவதற்கு லாயங்கள் உண்டாக்கி கொடுக்கச் செய்தார் சிதம்பர நாடார்.

அக்காலத்தில் அதிகாரிகளுக்கு கார்கள் கிடையாது. அதற்கு பதிலாக குதிரைகள் தான் வைத்திருப்பார்கள்.

இவ்வாறெல்லாம் அதிகாரிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நட்பை பெற்று அதன் மூலம் நாடர்களுக்கும் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார் சிதம்பர நாடார்.

சாத்தூரில் திண்ணைப் பள்ளிகளும், ஆரம்ப பாடசாலைகளுமே இருந்து வந்தன. உயர் கல்வி கற்க எட்டையாபுரம், ஸ்ரீ வில்லிபுத்தூர் சென்று வந்தனர். திண்ணைப்பள்ளி ஆசிரியர்களுக்கு உறவின் முறையிலிருந்து நிதி உதவி வழங்கச் செய்தார். இவ்வாறு கல்வி கற்கச் செல்பவர்கள் பெரும் பணக்காரர்களாகவே இருப்பார்.

சிதம்பர நாடார், ஏழை நாடார் மாணவர்களுக்கு கல்வி கற்க பண உதவி செய்து வந்தார்.

வர்த்தகர்களாகவும், வியாபாரிகளாகவும் சாத்தூரில் நாடார்கள் தங்கள் நிலையை உயர்த்திக் கொண்டு கல்வியை கற்றுணர்ந்ததின் மூலம் தொழிலகங்களை உருவாக்கத் தொடங்கினர்.

முக்கிய வீதிகளில் புதிதாக வீடுகளை கட்டி சாத்தூரை பிறப்பிடமாக்கி கொண்டனர்.

கல்வியின் மூலம் வழக்கறிஞர்களாகவும், எழுத்தர்களாகவும் திகழ்ந்தனர். செல்வத்திலும் மேம்பட்டு விளங்கினர்.

நாடார்களின் மேம்பாட்டுக்கான முயற்சி மற்ற சமூகத்து மக்களிடம் அனுதாபத்தை ஏற்படுத்தி விட்டது. அவர்களது உரிமையை நாடார்களின் முன்னேற்றம் எவ்விதத்திலும் பாதிப்பை உண்டாக்காது என்பதை உணரத் தொடங்கினர்.

ஏனைய சமூகத்தினரையும் அவர்களது உரிமைகளையும் ஆக்ரமிக்கா வண்ணம் நாடார்கள் சிதம்பர நாடார் தலைமையின் கீழ் நடந்து கொண்டனர்.

இவ்வாறு நடந்து கொண்டதின் மூலம் பிற சமூகத்தின் நேர்மையானவர்களின் அனுதாபம் நாடார்களுக்கு நிச்சயம் கிடைத்தது. தேவைப்பட்டால் அரசாங்கத்தின் பாதுகாப்பும் கிடைத்தது.



திருவாளர்கள் ஆடாத்து சிதம்பரம் பிள்ளை, வழக்கறிஞர் செல்லம் பிள்ளை, சீட்டிக் கடை ஹனிபுகான் சாகிப், சுப்பையன் சேர்வை, பேட்டை முத்துச்சாமி பிள்ளை, வழக்கறிஞர் வெங்கு அய்யர் ஆகியோர் சிதம்பர நாடாரின் நண்பர்கள்.

ஹார்வி துரை இவரது உறவினராகயிருந்தார்.

சர்க்கார் அதிகாரிகள் இவரது விருத்தினர்களாகயிருந்தனர்.

மற்ற ஜாதி மக்கள் இவரது நண்பர்களாகயிருந்தனர்.

நாடார்களோ இவரது தொண்டர்களாகயிருந்தனர்.

திருவாளர் வெங்கு அய்யர் சிதம்பர நாடாரின் சண்டைக்கார நண்பர்.

வெறுப்புக்கு பதிலாக அன்பையும் வன்முறைக்கு பதிலாக தியாகத்தையும், மிருக பலத்துக்குப் பதிலாக ஆன்மீக சக்தியையும் காட்ட வேண்டுமென்று நாடார் சமூக மக்களிடையே சொல்லி வந்தார் சிதம்பர நாடார்.

சிதம்பர நாடார் பார்ப்பதற்கு சம உயரமாயிருப்பார், உடலுக்கு தகுந்த முகம், அழகான தோற்றம், கண்கள் அழகே கவர்ச்சிக்கு காரணம், உருண்டு திரண்ட கண்கள், ஆற்றல் மிகுந்த, அறிவு மிகுந்த கண்கள், உதட்டிலே உறுதி உள்ளம் கவரும் வார்த்தைகள்.

சாத்தூரில் நாடார்கள் நடத்தும் திருவிழா மூன்று. பங்குனி மாதத்தில் மாரியம்மன் கோவில் திருவிழா, வைகாசி மாதத்தில் பத்ரகாளியம்மன் கோவில் திருவிழா, மார்கழி மாதத்தில் நடராஜர் திருவிழா

சிறப்பான வழிபாட்டு முறைகளினால் இத்திருவிழாக்கள் அமைந்திருந்தன.

அவ்விழாக்களிலே பெண்கள் அதிகாலையில் ஆற்றில் குளித்து, நீராடி விட்டு, குலவையிட்டு அம்மனைப் பாடிக் கொண்டே வந்து கோயிலுக்குச் செல்வார்கள்.

கோயிலில் பெண்கள் கும்மியும் கோலாட்டமும் நடத்துவார்கள். இவ்விழாக்களில் நாளடைவில் சிதம்பர நாடாரின் பெருமையைப் பற்றியும் புகழ் பாடத் தொடங்கினர்.

அவர் சாத்தூருக்கு வந்தது, நாடார்களுக்காக ஆற்றிய தொண்டு, நாடார்களுக்கு ஏற்பட்ட மரியாதை இவைகளை விளக்கிப் பெண்கள் பாடுவார்கள்.

நாடார் சமூகத்தினர் அருள் வழித் தலைவியாக திருமதி. லெட்சுமியம்மாள் என்ற பெண் இருந்தார்கள்.

அந்த அம்மாள் சிதம்பர நாடார் பற்றி வரிசை வரிசையாக எடுத்துச் சொல்லி பாட்டமைத்துக் கொடுப்பார்கள்.

அதைத் தான் குமரி பெண்கள் பொங்கல் விழாக்களில் பாடுவார்கள். பிற்காலத்தில் இப்பணியை ஆவுடைத்தாய் என்ற தாய் கடமையாக செய்து வந்தார்.

ஆற்று வளம் சாத்தூர் நகரக்கு பெருமையைத் தந்தது. ஆண்டில் ஒன்பது மாதங்கள் தண்ணீர் நிரம்பி ஓடும். மாலை நேரத்தில் அதிகாரிகள், வழக்கறிஞர்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், சிறுவர், சிறுமிகள் ஆற்று மணலிலே உலாவி காற்று வாங்கி கொண்டிருப்பர்.

பெண்கள் தண்ணீர் குடம் ஏந்திக் கொண்டு ஆற்றுக்கு வருவர். இரவு நேரங்களிலே வெளியூர், விவசாயிகளும், வியாபாரிகளும் ஆற்று மணலிலே சிறிது நேரம் படுத்து உருண்டு எழுந்திருப்பார்கள். சுக்கு காப்பி தயாரிக்கும் அந்திக்கடை இரவு நீண்ட நேரம் வியாபாரம் நடக்கும். அவைகளில் தயாராகும் காரமான சிறிய வடைகளுக்கு ஏக கிராக்கி.

அவைகளை வாங்கி வரச் செய்து விவசாயிகள், வியாபாரிகளுடன் ஆற்றில் சிறிது நேரம் அமர்ந்து ஓய்வெடுப்பார். இவ்வாறு ஆனந்தமாக ரசிப்பதில் சிதம்பர நாடாருக்கு பரம திருப்தி.

தை பொங்கல் மறுநாள் கரி நாள் அல்லது மாட்டுப் பொங்கல் நாள் இரண்டு நாளும் சாத்தூர் விழா கோலம் பூண்டிருக்கும். தைப்பொங்கலில் தங்கள் மூதாதையர்கள் சமாதி



சென்று பொங்கல் வைத்து வழிபடுவர். மறுநாள் ஊருக்கு வெளியேயுள்ள நந்தவனங்கள் ஆற்றுமேட்டுக்கு குழந்தை குட்டிகளுடன் சென்று விருந்துண்பர்.

இந்த ஏற்பாட்டை சாத்தூரில் முதன் முதல் ஆரம்பித்தவர் சிதம்பர நாடார் அவர்களும் அவரது நண்பர்களும் ஆவார்கள். படந்தால் செல்லும் வழியில் ஆற்றில் மணல்மேடு உள்ளது. இவை குன்று போல் உயர்ந்திருக்கும். அங்கு குடும்பம்,குடும்பமாக சென்று சிற்றுண்டி அருந்துவது கோலா கோலமாகயிருக்கும்.

இரவு அப்பகுதியில் வெளிச்சம் ஏற்படுத்தி பாதுகாப்பும் செய்து கொடுப்பார் சிதம்பர நாடார்.

ஆற்றை சுத்தமாக வைத்திருப்பது அக்காலத்தில் புனிதமாக கருதப்பட்டது. ஆற்றின் இருகரைகளிலும் சாலைகள், மரங்களும், தோப்புகளும், நந்தவனகுளம் அமைந்திருக்கும்.

"நிலவினை விரித்தாலென்ன, நெடுமனாலூற்றுத் தெண்ணீர்

நலமடவார்கொண்டேக, நடையினைக் கற்க வேண்டி

கலவமா மயில்கள் பின் செல், காட்சியைக் காணு தற்கே

அலர் மகன் இமையாக் கண்கள் அமரருக்கமைத்தா னென்று

சான்றவருரைவைப் பாற்றின் மிசையுறு சாத்தூர்"

என்று கவிஞர் திரு. சி. க. அன்னக்கிளி வைப்பாற்றின் இயற்கை காட்சியை கண்டு பாடியது கவிதை எழில் மட்டுமல்ல உண்மை

சிதம்பர நாடாருக்கு திரள் திரளான கூட்டம் அதன் மத்தியிலே தான் விருந்தோம்பல் இவைகள் தான் அவருக்கு விருப்பமானவை. தனிமையை அவர் எப்பொழுதும் வெறுப்பார். எப்பொழுதும் அவரோடு பலர் விருந்து உண்பர். உணவில் ருசியையும், சுத்தத்தையும் உண்ணிப்பாக கவனிப்பார்.

அதைப் போலவே சாத்தூரில் நாடார் நளபாக போஜன்

சாலை என்ற பெயரில் உணவு விடுதியை ஆரம்பிக்கச் செய்து குறைந்த லாபத்தில் சுத்தமான, ருசியான சாப்பாட்டையும் வழங்கச் செய்தார்.

பாக சாஸ்திர அமைப்பில் காலை, மதியம், மாலை, இரவு உணவு தயாரிக்கச் செய்தார். உணவை பக்குவப்படுத்துவதை தான் பாக சாஸ்திரம் என்று குறிப்பிட்டது. இக்கலையால் மிகவும் புகழ் பெற்று விளங்கியவர்கள் நளமகாராஜாவும், பீமசேனனுமாகும். நளன் சமைத்ததை நளபாகம் என்று சொல்வார்கள்.

கடை அலுவல்களை சீஷன் காலத்தில் முடிப்பதற்கு இரவு மணி 12 ஆகி விடும். கணக்குகளை முடித்து வைக்க கடையாட்களிடம் சொல்லிவிட்டு சரியாக 9 மணிக்கு மகமை கட்டிடத்திற்கு போவார். அங்கு இரவு 10 மணி வரையிருப்பார். இரவு 10 மணியிலிருந்து 11 மணி வரை ஆற்றில் நண்பர்களுடன் இருப்பார். பின்பு 11 மணியிலிருந்து 12 மணி வரை நாடார்கள் நந்தவனம் அமைப்பு வேலைகளை கவனிப்பார்.

இரவு 12 மணிக்கு கடை கணக்குகளை முடித்துக் கொண்டு வீட்டிற்கு போகும் பொழுது கடையாட்களை பஜாருக்கு அனுப்பி இரவு சாப்பிடாதவர்கள் இருந்தால் அவர்களுக்கு உணவு வழங்கச் சொல்வார். கடையாட்கள் பஜாரில் கடைகளில் படுத்திருந்தவர்களைக் கூட எழுப்பி சாப்பிட்டு விட்டீர்களா என்று கேட்டு அவர்களில் சாப்பிடாதவர்களை அழைத்துக் கொண்டு நாடார் நளபாக போஜன சாலையில் படைத்து சிதம்பர நாடார் கணக்கில் பற்று எழுதச் சொல்லி விட்டுத்தான் கடை வேலையாட்கள் வீட்டுக்கு போவார்கள்.

இது அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாகும். சாத்தூரில் தன் முன்னால் யாரும் பட்டினி என்று நிற்கக் கூடாது என்பது அவரது கொள்கை

அவர்களை பட்னி கிடப்பவர்கள் என்ற கருத்தோடு அவர் செய்வதில்லை. சாத்தூருக்கு வரும் விருந்தினர்கள் என்றுதான் மெச்சுவார்.

"வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவத்து பாழ்படுதல் இன்று"



என்று வள்ளுவன் கூறியதைப் போல தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள் தோறும் போற்றிய சிதம்பர நாடாரின் வாழ்க்கை துன்பத்தால் வருந்திக் கெட்டுப்போகவில்லை.

ஒருவனுக்கு ஒரு வேளை உணவு இல்லையானால் உலகத்தையே அழிப்பேன் என்றார் பாரதியார் பாடலுக்கு எவ்வளவு பெருமை!

சிதம்பர நாடோரோ இரவு பட்னி கிடப்பவரை தேடிப்பிடித்து உணவு ஊட்டி தூங்கிடச் செய்தார்.

செய்கையால் செய்த சிதம்பர நாடாருக்கு எவ்வளவு பெருமை வரவேண்டும்.

எல்லாரும், கல்வியும், தொழிற்பயிற்சியும், இல்லமும், உடையும், உணவும், பிற நலன்களும் பெறத்தக்க வகையில் மக்கள் சமுதாய அமைப்பு இருக்க வேண்டும் என்று சிதம்பர நாடார் கூறி வந்தார்.

அதற்கு ஏற்ப சாத்தூரில் நாடார்களின் கூட்டு அமைப்பில் நூற்பாலை, நெசவு ஆலைகளைத் துவங்க திட்டமிட்டார். அதற்கு நாடார் மக்களிடையே நல்ல ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்தது.

K.C.A. சிதம்பர நாடாரின் சகோதரர் K.C.A. ஞானகிரி நாடார் அவர்களால் இம்முயற்சி தளர்ந்து விட்டது.

ஞானகிரி நாடாருக்கு சிதம்பர நாடாரின் பொதுப் பணியினால் கோபமடைந்து வந்தார். அவரை கண்டிப்பதற்காக சாத்தூருக்கு ஞானகிரி நாடார் வருவார்.

சிதம்பர நாடார் பருத்தி கொள்முதலுக்கு என்று நாகலாபுரத்துக் போய் விடுவார். ஞானகிரி நாடார் ஏமாற்றுத்துடன் சிவகாசி திரும்பி விடுவார்.

இருப்பினும் தன் தம்பி சிதம்பரநாடார் மீது அளவு கடந்த அன்பும், பாசமும் கொண்டிருப்பார். சிதம்பரம் ஒரு அறிஞன் விடாமுயற்சியுடையவன், மனசாட்சிக்கு கொஞ்சங்கூட விரோதமில்லாதவன், வர்த்தகத்திலும் கெட்டிக்காரன் என்று

புகழ்பாடுவார்.

இத்தகைய K.C.A. ஞானகிரி நாடார் சிவகாசியில் 1894 ல் நாடார்கள் ஆண்கள் பாடசாலையை ஆரம்பிக்க துணையாகயிருந்தார். இதைப்போலவே விருதுநகரில் 1885ல் ஆண்டும் கமுதியில் 1889 ஆம் ஆண்டிலும் அருப்புக்கோட்டையில்,1895ஆம் ஆண்டிலும் பள்ளிகளை நாடார் சமூகத்தினர் திறந்தனர்.

சாத்தூரில் நாடார் பள்ளியை துவக்க வேண்டுமென்று சிதம்பர நாடாருக்கும், மகாலிங்க நாடாரும் முயற்சி செய்ய ஆரம்பித்தனர். இதனால் நூற்பு ஆலை, நெசவு ஆலை நிறுவும் எண்ணத்தில் வளர்ச்சியில்லாமல் போய்விட்டது.

மகாலிங்க நாடாரின் மகன் திரு. அ.மா.ம. சின்ன மணி நாடார் சாத்தூரில் நூற்பு ஆலை ஆரம்பிக்க திட்டமிட்டு பின்னர் அவற்றை தூத்துக்குடியில் துவக்கினார்.

சிதம்பர நாடாரின் இரண்டாவது மகன் திரு. அருணாசல நாடாரும், மகாலிங்க நாடாரின் மூத்த மகன் திரு. அ.மா.ம. வேலாயுத நாடாரும் சாத்தூரில் 1910ல் நாடார்களின் பள்ளியை ஆரம்பித்தனர்.

நாடார் மக்கள் மீது மற்ற சமூக மக்களுக்கு மதிப்பும், மரியாதையும் கிடைக்க ஆரம்பித்து சிதம்பர நாடாரின் தலைமை எல்லா ஜாதிமக்களுக்கும் தேவை என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

1886 விருந்து சாத்தூரில் பஞ்சாயத்து யூனியன் என்ற பெயரால் உள்ளாட்சி துறை (லோக்கல் போர்டு) நிர்வாகம் நடைபெற்று வந்தது. இதற்கு அரசினரே சேர்மன்களை நியமனம் செய்து வந்தனர்.

இவர்களில் திரு. எஸ். அப்பாசாமி பிள்ளை, திரு. வாசுதேவராவ், திரு. ஆர். ஜான் பிள்ளை, திரு. ஜி. விசுவாச நாடார் ஆகியவர்கள் சிதம்பர நாடார் ஆதரவில் நியமனமான சேர்மன்கள்.

சாத்தூர், சங்கரன் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாக்களை சேர்ந்த விவசாயிகள் வைப்பாற்றை வளப்படுத்த திட்டம் கொடுத்தனர். மேற்கு தொடர்மலையில் உற்பத்தியாகும் கீரியாற்று



கால்வாயை இந்த ஆற்றில் திருப்பி விட வேண்டும் என்பது தான் அந்த திட்டம்.

சாத்தூர் தாலுகா விவசாயிகள் என்ற முறையில் சிதம்பர நாடாரும் இக் குழுவினர்களுடன் சென்று 1892 ல் சேரன்மாதேவியில் திரு. C.W. வுட் என்ற ஆங்கிலேய நீர்பாசனத்துறை இன்ஜினியரை சந்தித்தார்.

கீரியாறு கேட்ச் மெண்ட் ஏரியாவிலிருந்து அவற்றை திருப்பி எட்டாயிரம் அடி மலைக்குள் குடைந்து வருவதற்கு அப்பொழுது ரூ.2,00,000 செலவாகுமென்றும் இதற்கு நிதி வசதியில்லை என்றும் திட்டத்தை கைவிடப்பட்டது. தற்போது இத்திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் செலவாகும்.

கி.பி. 1205ல் மதுரையில் பாண்டியர்களை வென்று திரிபுவன் வீரன் என்று உலகத்தார் சொல்லுமாறு மகுடஞ்சூடி வளம் வந்த மூன்றாம் குலோத்துங்க சோழன் பாண்டியர்களின் பெருஞ்சேனைகளை அழித்து வலிமை பொருந்திய மதில்களை இடித்துக் கொடிகள் உயர்த்தி மேற்கு தொடர் மலையின் உச்சிகளை இடித்தாக சரித்திரம் கூறுகிறது.

இவ்வாறு அச்சோழன் செய்ததில் வைப்பாற்றுக்கு கீரியாறு,பம்மையாறு இவ்வற்றிலிருந்து இயற்கையாக வந்து வைப்பாற்றில் கலந்து கொண்டிருந்த கால்வாய்களை அடைத்தும் மேற்கே திருப்பியும் வைப்பாற்றை வளப்பமில்லாமல் செய்தான் குலோத்துங்க சோழன்

எனவே கீரியாற்றிலிருந்தும், பம்மையாற்றிலிருந்தும் தண்ணிரை வழங்க கோருவது என்பது உரிமையோடு கூடிய கோரிக்கை. இவற்றை கேட்டு வந்த விவசாயப் பெருங்குடி மக்களின் முயற்சியில் சிதம்பர நாடாரும் பங்கு கொண்டதில் வியப்பில்லை.

அவரது பூர்வீகத்து கிராமமான கனஞ்சாம்பட்டியிலிருந்து தெற்கே இரண்டாவது மைலில்தான் வைப்பாறு நதியும் ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே வைப்பாற்று கரை வாசி என்ற முறையிலும் அந்நதியை வளப்படுத்தும் நீண்ட கால முயற்சிக்கு அவர் வித்திட்டதில் வியப்பில்லைதான்.

தூத்துக்குடிக்கு முதன்முதல் ரெயில் மார்க்கம் ஏற்படும் பொழுது சாத்தூரிலிருந்து அவற்றை ஆரம்பிக்க வேண்டுமென்றும், திருவனந்தபுரத்திற்கு தென்காசி, கொல்லம் வழியாக ரெயில் மார்க்கம் ஏற்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்த பொழுது அவற்றையும் சாத்தூரிலிருந்தே துவக்க வேண்டும் என்று சிதம்ப நாடார் தலைமையில் ஹார்விதுரை ஒரு குழுவினரை அனுப்பி அதற்கென ஒத்துழைப்பையும் அளித்து வந்தார்.

சாத்தூரிலிருந்து தூத்துக்குடி செல்லும் ரெயில்பாதை பெரிய கொல்லபட்டி,எட்டையாபுரம், விளாத்திகுளம் வழியாக அமைப்பதாக சர்வே செய்யப்பட்டது. எட்டையாபுரம் அரசரின் கடுமையான எதிர்ப்பினால் ரெயில்வே கம்பெனியார் கைவிட்டு பின்னர் மணியாச்சிலிருந்து தூத்துக்குடி ரெயில்வே பாதையை அமைத்தனர்.


அதுபோலவே சாத்தூரிலிருந்து நேரடியாக சிவகாசி வழியாக அமைக்க சர்வே செய்யப்பட்ட ரெயில்வே மார்க்கத்தை விருதுநகர் பிரமுகர்களின் நீதிக் கட்சியின் செல்வாக்கினால் சாத்தூர் வழியை கைவிட்டு விருதுநகரிலிருந்து 1927 ல் தொடங்கப்பட்டது.

இது மாதிரியான நிர்மானத் திட்டங்களிலும் சிதம்பர நாடாரின் கவனம் சென்றது. 1899 ல் சிவகாசியில் நாடார் மக்கள் கொள்ளையடிப்பை தடுத்து பயங்கரமாக போராடிக் கொண்டிருந்தனர். இக்கொடிய வியாதி சாத்தூருக்கு வராமல் தடுப்பதில் சிதம்பர நாடார் மிகுந்த ஆர்வம் காட்டினார். சாதி பேதமற்ற நிலையை வளர்த்து ஐக்கிய கொடியை உயர்த்திக் கொண்டிருந்த சிதம்பர நாடாரின் கவலையில் ஏ அண்ட் எப் ஹார்வி பஞ்சாலையின் பங்காளியாகவும் நிர்வாக இயக்குனராகவும் இருந்த பிராங்க் ஹார்வி அவர்களும் பங்கு கொண்டார்.

மதுரை பசுமலையிலிருந்து சாத்தூருக்கு வந்த சில தினங்கள் தங்கி சாத்தூரின் அலுவலகத்தில் எல்லா சமூக மக்களின் கூட்டு கூட்டத்தை கூட்டுவித்து சாத்தூரில் எப்பொழுதும்போல சண்டையில்லாமல் வாழ சபதம் எடுக்கச் செய்தார்.

12 வது மைலில் பயங்கரமான கொள்ளை, கொலை, சாத்தூரிலே சமாதானம் அங்கே ஆண், பெண் வித்தியாசமின்றி ஒவ்வொருவரும் கையில் ஆயுதம் தாங்கிய போர்க் கோலத்துடன் நிற்கின்றார்கள்.





இதய மூர்த்தி

K.C.A. அருணாசல நாடார்



சாத்தூரில் அன்பு என்னும் சமாதானக் கொடியின் கீழ் ஐக்கியப்பட்டு நிற்கின்றார்கள்.

அங்கே ஜாதி வெறி

இங்கே ஒன்றுபட்ட மனப்பான்மை

அங்கே பேதவுணர்ச்சியால் பேயாட்டம்

இங்கே சகோதர உணர்ச்சியால் சமத்துவம்

ஏ அப்பா எவ்வளவு வித்தியாசங்கள், இவ்வளவுக்கும் காரணமாகயிருந்த அந்த கம்பீர மனிதர் சிதம்பர நாடாரே என்று பிராங்க் ஹார்வியும், துணைவியாரும் பாராட்டினர்.

ஆம் அவ்வெள்ளைக்கார சீமான் பாராட்டியதைப் போல சிதம்பர நாடார் கம்பீரமானவரே

ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. பெரிய மனிதர்களின் பாகுபாட்டை அது விளக்குவதற்கு மிகவும் ஆதாரமானவை

பரம்பரையாகப் பெரிய மனிதர் சிலர் யோக்கியதையால் பெரிய மனிதர் சிலர், யோகத்தால் பெரிய மனிதர் சிலர்

சிதம்பர நாடாரைப் பற்றி நினைக்கும் பொழுது இந்த பழமொழி நினைவுக்கு வருகிறது.

மூன்று வழியிலும் பெரிய மனிதர் ஆனவர் சிதம்பர நாடார்

பரம்பரை பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர், யோக்கியதையை காப்பாற்றியவர், யோகத்தால் அணைக்கப்பட்டவர்.

வர்த்தகத்தில் தேர்ச்சியும், திறனும் பெற்று, மதிப்போடு வாழ்ந்து வந்தார்.

சிதம்பர நாடாருக்கு மூன்று பையன்கள் மூத்தவர் பெயர் சோனாசலம், இரண்டாவது பையன் பெயர் அருணாசலம், மூன்றவது பையன் பெயர் தர்மராஜன்

1884ல் சிதம்பர நாடார் சாத்தூர் குடியேறியதும் தன் மனைவி

மகன்களையும் அழைத்து வைத்துக் கொண்டார்.

மூன்று குழந்தைகளும் சாத்தூரிலேயே பள்ளிப் படிப்பைத் துவக்கினார். மேல்படிப்புக்காக ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள C.M.S. உயர்நிலைப்பள்ளியில் சேர்த்தார்.

இரண்டாவது மகன் அருணாசலம் மெட்ரிக்குலேசன் வரை படித்தார். ஆங்கில மொழியில் அழகாக பேசவும் எழுதவும் திறமை பெற்றிருந்தார். 1897 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் தேதியில் இவருக்கு திருமணம் நடைபெற்றது.

இவர் எட்டு ஆண் குழந்தைகளையும் ஒரு பெண்ணையும் பெற்றார். இவர்களில் ஒருவரான திரு. க.சொ.அ. லெட்சுமண நாடார் சாத்தூர் பேரூராட்சியின் தலவராகயிருந்தவர். திரு. ஞானகிரி என்பவர் சென்னையில் மேதை என்ற புகழுடன் வாழ்ந்து வந்தவர்.

மூத்தவர் சோனசலத்தின் மகன் துரைராஜ் நாடார் சிவகாசி நகராட்சியில் பல ஆண்டுகளாக நகராட்சி உறுப்பினராகயிருந்தவர்.

இளையவர் தர்மராஜ நாடாருக்கு சிதம்பரம்,ஞானகிரி என்ற பையன்களும் இரண்டு பெண்களும் இருந்தனர். தந்தை சிதம்பர நாடாரின் பெயரை தன் மூத்த மகனுக்கும், தன் பெரியப்பா ஞானகிரி நாடார் பெயரை தனது இளைய மகனுக்கும் சூட்டி பெருமை பட்டுக் கொண்டார் தர்மராஜ் நாடார்.

என் பெரியப்பாவும், என் அப்பாவும் என் வீட்டில் தான் பிறந்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்வார்.

1902 ஆம் ஆண்டில் சிதம்பர நாடாரின் உடல் நிலை வர வர சீர் கெட்டுக் கொண்டு வந்தது.

தலைவலி, தூக்கமின்மை, அஜீரணம் ஆகிய எல்லாம் கோளாறுகளும் ஒன்று சேர்ந்து இவருடைய உழைப்புச் சக்தியைக் குன்றச் செய்து விட்டன.

இறுதியாக சுபகிருது வருடம் (1902) புரட்டாசி மாதம் வெள்ளிக்கிழமை 11-ந்தேதி பகல் 3 மணிக்கு இவரது கண்கள் மூடின, மூச்சு நின்றது.



சிதம்பர நாடார் திடீர் மரணம் பற்றிய செய்தி காட்டுத் தீ போல் பரவியது மறைந்த தங்களுடைய மதிப்பிற்குரிய பிரமுகருக்கு இறுதி அஞ்சலி செலுத்த நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் அவரது வீட்டிற்கு விரைந்தனர்.

ஆங்காங்கு திறந்திருந்த கடைகளெல்லாம் அடைக்கப்பட்டன. சப் கலெக்டர் திரு. லீயூ. ஐ.சி.எஸ். சிதம்பர நாடார் இல்லத்திற்கு வந்திருந்து இறுதி மாரியாதை செலுத்தினார்.

"எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து விடுபட முடியாத நிலையில் இருக்கிறேன்" என்று அவர் கூறினார்.

மகாலிங்க நாடார் தூணில் முட்டி முட்டி அழுதார்.

கிராமங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் அவருக்கு இறுதி மரியாதை செலுத்த ஓடோடி வந்தார்கள். மதுரையிலிருந்து ஹார்வி தம்பதிகளும், பெரிய நகரங்களிலிருந்து வர்த்தகர்களும் வந்து சேர்ந்தனர்.

மறுநாள் காலை உடல் அடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டதும் அவர் வீட்டு முன்பு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கதறி அழுதபடியே சிதம்பர நாடார் வாழ்க என்று சோகக் குரல் எழுப்பினார்கள்.

சிலர் உணர்ச்சி வசப்பட்டு இரதத்தின் முன் பாயவும் முயன்றார்கள். அவர்களை எல்லாம் போலீசார் மிகுந்த சிரமத்துடன் கட்டுப்படுத்தினார்கள்.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ரோட்டின் இரு புறமும் மக்கள் வெள்ளம் அலைமோதியது.

ஐயா, ஐயா, என்று ஆயிரக்கணக்கான மக்கள் கதறினார்கள்.

ஊர்வலத்தின் பின்னே மக்கள் கடலென திரண்டு கதறிக் கொண்டு வந்தார்கள்.

பல இடங்களில் சிதம்பர நாடார் உடல் மீது மக்கள் மலர்கள் வாரி வாரி வீசி வீதியெல்லாம் மலர்களாகக் காணப்பட்டது.

சிதம்பர நாடார் இறப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு

அவரது கடைசி திட்டமாக நான் இறந்தால் என்னை பெருமாள் கோவில் கிழக்கு ரத வீதியில் ரெயில்வே லயனுக்கு மேற்கே புதையுங்கள் என்று வெளியிட்டார்.

அதைப்போல ஊர்வலம் கிழக்கு ரத வீதியை அடைந்தது. அங்கு புதைப்பதற்காக முன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தை அடைந்ததும் அங்கே புதைக்கக் கூடாது ஊருக்கு வெளியே தான் புதைக்க வேண்டும் என்று வழக்கறிஞர் திரு. வெங்கு அய்யர் தலைமையில் ஒரு கூட்டம் நின்று ஆட்சேபித்தது.

குழுமியிருந்த மக்கள் ஆத்திரமடைந்தனர். அதிகாரிகள் சமரசம் பேசினர். குறிப்பிட்ட இடத்திற்கு சற்றுத்தள்ளி ரெயில்வே லயனுக்கு கிழக்கே சிதம்பர நாடாரின் ஆசையையும் நிறைவேற்றிய தோரணையில் அதிகாரிகளின் தீவிர ஏற்பாட்டினால் ஆற்று வட கரையில் புதைத்தனர்.

பிரச்சனைகளுக்கிடையே வாழ்ந்து வந்த சிதம்பர நாடார் அவர்களுக்கு சவக்குழியிலும் பிரச்சனை தோன்றி விட்டது.

அகிம்சை வழியில் நடந்த காந்திஜீக்கு துப்பாக்கி குண்டே உயிரை குடிக்கவில்லையா?

நண்பராகவும், விரோதியாகவும் இருந்த வழக்கறிஞர் திரு. வெங்கு அய்யர் தன் நண்பர் சிதம்பர நாடார் மறைவால் தனது சட்ட ஆயுதத்தை எடுத்து வீசிக் காட்டினார்.

மகாலிங்க நாடார் தனது நண்பரும், உறவினருமான சிதம்பர நாடார் பிரிவினால் அதிர்ச்சி அடைந்திருக்கும் நிலையில் திரு. வெங்கு அய்யரின் எதிர்ப்பை கண்டு திகிலடைந்து விட்டார்.

கண்ணீர் ததும்ப "சிதம்பரம் நீ இறக்காமல் நான் இறந்திருந்தால் இப்படி ஒரு சம்பவத்திலிருந்து பின் வாங்காமல் திடமாக நீ செய்து முடித்திருப்பாய் இப்பொழுது இறந்தது நீயல்லாவா? உயிரோடிருப்பது நானல்லவா என்னால் உனது கடைசி ஆசையை நிறைவேற்ற முடியாமல் மரமாக நிற்கின்றேனே" என்று சிதம்பர நாடாரின் சடலத்தை கட்டி அழுதார்.

சிதம்பர நாடாரின் உடலைத் தாங்கி வந்த இரதம் ரயில்வே



லயனைக் கடந்த சில விநாடிகளிலேயே அதிகாரிகளின் முயற்சியினால் குழி தோண்டப்பட்டிருந்த இடத்திற்கு வந்தது.

சிதம்பர நாடாரின் உடலை உறவினர்களும், நண்பர்களும், அதிகாரிகளும், தூக்கிச் சென்று குழியில் அமைதியாக வைத்தனர்.

சாத்தூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. ஆர். ஜான் பிள்ளை சிதம்பர நாடாரின் காலடியில் மலர் வளையம் வைத்து வணங்கினார். தொடர்ந்து பல பிரமுகர்கள் மலர் வளையம் வைத்தனர்.

சிதம்பர நாடாரின் பிள்ளைகள் இறுதி மரியாதை செலுத்தி அடக்கம் செய்யப்பட்டது. அப்போது அங்கு கூடியிருந்தவர்கள் கதறி அழுதனர். பலர் தரையில் விழுந்து ஐயா, எங்களை பிரிந்து சென்று விட்டீர்களே என்று அலறினார்கள்.

அய்யா, முதலாளி, தலைவர் என்றெல்லாம் சாத்தூர் மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட க.சொ.அ. சிதம்பர நாடார் மறைந்து விட்டார்.

அவர் இறக்கும் பொழுது வயது 49. அவருக்குள்ள வசதிக்கு இன்னும் நாற்பதாண்டுகள் வாழ்திருக்கலாம்(1942 வரை)

அவர் இறந்து அறுபத்து ஆறு ஆண்டுகளில் அவரது நாமத்தை உச்சரிக்க சாத்தூர் பேரூராட்சி மன்றம் புதிதாகதோன்றி வரும் நகரின் வடக்கு பகுதிக்கு சிதம்பரம் நகர் என்ற பெயரை ஏகமனதான தீர்மானத்தின் பேரில் நிறைவேற்றி சிதம்பர நாடாரின் பொதுப்பணிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டது.

திரு. V.S. தியாகராஜன் செட்டியார்., திரு. வீ. பரமசிவ முதலியார், திரு. சொ. சேது ராமலிங்க பிள்ளை, திரு. அ. சேகரகுல், திரு. ந. கருப்பையாத்தேவர், திரு. சி. செல்லச்சாமி ஆகியோர் சிதம்பர நாடாரின் சேவையை பேரூராட்சி மன்றத்தில் எடுத்துக் கூறி தீர்மானத்தை ஆதரித்து பேசினர்.

1902 ல் சிதம்பர நாடார் மறைந்து இரண்டு ஆண்டுகளுக்கு பின்பு 1904ம் ஆண்டு ஜீன் மாதம் 30 ந் தேதியில் சிதம்பர நாடாரின் இளைய மகன் தர்மராஜ நாடாருக்கு மூத்த மகனாக K.C.A.D. கல்விக்

சிதம்பர நாடார் பிறக்கிறார். 1911ம் ஆண்டு நவம்பர் 26ம் தேதி ஞானகிரி நாடார் பிறக்கிறார்.

க.சொ.அ. சிதம்பர நாடாரைப் போலவே அவரது பேரன் K.C.A.D.சிதம்பர நாடாரும் சாத்தூருக்கு வர்த்தகம் செய்வதற்காக 31 வது வயதில் வருகிறார். பாட்டனார். க.சொ.அ. சிதம்பர நாடார் 31 வது வயதில்தான் சிவகாயிலிருந்து சாத்தூருக்கு வர்த்தகம் செய்வதற்காக வந்தார்.

மூதாதையரான சிதம்பர நாடார் நடத்தி வந்த பஞ்சு,பருத்தி, நவ தானியம் வியாபாரம் இப்பொழுது இல்லை.

சிவகாசியில் கார்நேஷன் லித்தோ பிரஸ், சாத்தூர் K.C.A.D. சிதம்பர நாடார் அண்ட் கம்பெனி இவைகளின் பங்குதாரராகவும், ஸ்டாண்டர்டு வாக்குவம் ஆயில் கம்பெனியின் கமிஷன் ஏஜெண்டாகவும், மதரஸ் இந்தியன் சர்க்கார் இன்சூரன்ஸ் கம்பெனியின் டைரக்டராகவும், வெங்கிடாசலபுரம் பழனியாண்டவர் மேச் கம்பெனியின் பங்குதாரராகவும் இருந்து சாத்தூரில் தனது தலைமையகத்தை வைத்து நடத்தி வந்தார்.

சிதம்பர நாடார் என்ற பெயருக்கு சாத்தூர் சிதம்பர நாடாரா? அல்லது சிவகாசி சிதம்பர நாடாரா? என்ற கேள்வி எழுவதுண்டு.

அந்த அளவுக்கு சாத்தூரிலும், சிவகாசியிலும் வெவ்வேறு பொதுப்பணிகளுடன் K.C.A.D. சிதம்பர நாடார் புகழ் பெற்று வந்தார்.

பெரியவர் சிதம்பர நாடாரின் புகழ் செல்வநிலை, பொது நல அனுபவம் ஆகியவற்றின் பயன் முழுவதையும் அனுபவித்தவர் அவரது இரண்டாவது மகன் அருணாசல நாடாராகும். அருணாசல நாடாரின் மகன்களில் சென்னை திரு. ஞானகிரி நாடாரும் புகழ் பெற்றிருந்தார்.

அருணாசல நாடார் தனது தந்தை சிதம்பர நாடார் மீது அளவு கடந்த பக்தியும், மரியாதையும் வைத்திருந்தார். முகச் சாயலிலே தந்தை போலவேயிருந்தார். மனப்போக்கிலும் அப்படியே.

ஆனால் செயலில் நிதானமானவர், கல்வியிலே இவரது தந்தை சிதம்பர நாடாரை போலவே மிகுந்த உற்சாகம். சாத்தூரில்





கல்வித்தந்தை

K.C.A.D. சிதம்பர நாடார்

கூடத்தை நிறுவுவதில் தந்தை காட்டிய உற்சாகத்தை அருணாசல நாடார் நிறைவேற்றினார்.

திரு. ஜோசப் வாத்தியார் நடத்தி வந்த பள்ளியை விலைக்கு பெற்று 1910 ல் சாத்தூர் இந்து நாடார்கள் எட்வர்ட் பாடசாலை என்ற திருப்பெயரால் நிறுவி அதற்கு தான் காரிய தரிசியாகவும், தனது தந்தையின் நண்பர் திரு. அ.மா. மகாலிங்க நாடாரின் மூத்த மகன் திரு. அ.மா.ம. வேலாயுத நாடார் நிர்வாக குழுவிற்கு தலைவராகவும், அவரது இளையவர் திரு. அ.மா.ம. சின்னமணி நாடார் துணைத்தலைவராகவும் இருந்து கொண்டனர்.

இவர்களின் முயற்சிக்கு மிகவும் ஒத்துழைப்பு நல்கியவர் திரு. வீ.மா.வீ. சொக்கலிங்க நாடாராகும். அவரும் இக்குழுவில் துணைத்தலைவராகவும் 1926லும், 1935லும் காரியதரிசியாகவும், நிதி காப்பாளராகவும் இருந்து வந்தார்.

1917 லிருந்து 1923 வரை காரியதரிசியாக இருந்து 1-9-31ல் தலைவராகவும் அருணாசல நாடார் பொறுப்பு வகித்தார்.

1918 ல் இப்பள்ளிக்கு சொந்தக் கட்டிடம் கட்டினார். அப்பொழுதுதான் ஆரம்பப்பள்ளி, உயர்தரப்பள்ளியாக உயர்த்தப்படுகிறது. 1919 ல் இந்தியன் கம்பெனி 1913ம் ஆண்டு சட்டப்பிரசாரம் நிர்வாக குழு பதிவு செய்யப்பட்டது.

இப்பள்ளியை நடத்துவதில் பல ஆபத்தான கட்டங்களையெல்லாம் கடந்து திரு. க.சொ.அ. அருணாசல நாடார், திரு. வீ.மா.வீ. சொக்க லிங்க நாடார் உதவியுடன் நிரந்தர (சாசுவத) அங்கீகாரம் பெற்றுத் தந்தார். இந்த அங்கீகாரம் பெற்ற அருணாசல நாடார் மதம் மாறி கிருஸ்துவராகிறார்.

இதற்காக கல்வி இலாகா மாநில டைரக்டராகயிருந்த மிஸ்டர் கிரீவ் என்ற ஆங்கிலேயரின் நட்பைப் பெற்று உயர்நிலைப்பள்ளிக்கு நிரந்தர அனுமதியைப் பெற்றதற்கு அருணாசல நாடாரை பாண்டிய மண்டலமே பாராட்டியது.

மிஸ்டர் கிரீவ் அருணாசல நாடாரின் நுட்பமான அறிவையும் ஆங்கிலத்தில் இவர் கையாண்ட பதப் பிரயோகங்களையும் கண்டு பிரமித்துப் போனதுடன் இந்த இளமையின் தோளின் மீது எவ்வளவு

முதுமையான மூளை தங்கியிருக்கிறது என்று வியந்து பாராட்டினார்.

இப்பாராட்டுதல்களை தனது தந்தை மரியாதைக்குரிய சிதம்பர நாடார் கேட்டிருக்க வேண்டுமே என்பதுதான் அருணாசல நாடாரின் கவலையாகயிருந்தது.

இப்பள்ளியை 24.4.37 விருந்து இவரது தம்பி தர்மராஜ நாடாரின் மூத்த மகனும் சிதம்பர நாடாரின் பேரனுமான திரு. க.சொ.அ.த. சிதம்பர நாடார் காரியதரிசியாக 1959 வரை நடத்தி வந்தார். 30.12.1959 விருந்து நிர்வாக குழுவின்தலைவராக 37 ஆண்டுகள் பணியாற்றி மாநிலத்தில் சிறந்த கல்விக் கூடம் என்ற நற்பெயரையும் பெற்றுத் தந்தார்.

கல்வி அதிகாரிகள் K.C.A.D. சிதம்பர நாடாரின் நிர்வாகத் திறமையை பாராட்டியதுடன் சென்னை மாநில கல்வி இலாகா டைரக்டர் திரு. சா. ஸ்டாதம் இவரது பண்புக்காக பழகி நெருங்கிய நண்பரானதுடன் சாத்தூருக்கு பலமுறை வருகை தந்து சிதம்பர நாடாருக்கு கல்வித்தந்தை என்ற பட்டத்தையும் சூட்டிவிட்டுச் சென்றார்.

1921ல் பெண்களுக்கான பள்ளியொன்றை பஞ்சுக்கடை, மரக்கடை, மகமை நிதியிலிருந்து க.சொ.அ. அருணாசல நாடார் முயற்சியினால் வி.மா.வீ. சொக்கலிங்க நாடார் ஆதரவுடன் துவங்கப்பட்டது. இதன் நிர்வாக குழுவிற்கு அருணாசல நாடார் தலைவராகவும், திரு. அ.வெ.அ.கா. ஆறுமுக நாடார் காரியதரிசியாகவுமிருந்து பெண்கள் பள்ளி நடத்தி வரப்பட்டது. இதற்கு இந்து நாடார்கள் மேரி பெண் ஆரம்பப் பாடசாலை என்று பெயர் வைக்கப்பட்டது.

1932ல் திரு. ந.க.பு.க. ரத்தினசாமி நாடார் அவர்கள் காரியதரிசியாக பொறுப்பேற்று உயர்தர ஆரம்ப பாடசாலையாக உயர்த்தினார். திரு. சு.ச. சுப்பையா நாடார், திரு. வி.சொ.ச. சீனியப்ப நாடார் ஆகியோர் காரியதரிசியாகவும் இருந்து செயலாற்றியிருக்கின்றனர்.

கல்வியை வளர்ப்பது என்பதும் அதற்காக பாடுபடுவது என்பதும் அக்காலத்தில் சாதாரணமானதல்ல.



கும்பிடக்கோயில்லை நாசகாரத்தை வளர்க்கும் கல்விக் கூடம் தேவையா?

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்புத் தேவையா?

என்றெல்லாம் அடுக்கடுக்காய் கேட்கும் நாடார்களும் ஏராளம் இருந்தனர்.

நமது நாட்டில் வெள்ளையர் ஆட்சிக்கு முன்பே பாளையக்காரர்கள், நவாப்புகள் ஆட்சியின் போதே கல்விக் கூடங்களை நிறுவி எல்லா சமூக மக்களையும் படிக்கச் செய்வதில் நாடார்கள் முன்னணியில் இருந்தனர். வெள்ளையர்கள் ஆட்சியில் இதை தங்கு தடையின்றி செய்ய முடிந்தது.

சாத்தூர் நாடார்கள் உயர்நிலைப்பள்ளியில் நாடார்களைத் தவிர மற்ற சமூக மக்கள் கல்வி கற்றால் அவர்களுக்கு அரைச்சம்பளம் வாங்கப்பட்டது. ஏழைகளுக்காக ஒரு தேர்வு நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்கு கால் சம்பளம் வசூலிக்கப்பட்டது.

நாடார் மாணவர்களுக்கு இவ்வித சலுகை வழங்கப்படவில்லை. முழுச்சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் ஏழைப் பரீட்சை எழுதினால் அரைச் சம்பளம் என்றும் மானேஜ் மெண்ட் கமிட்டி நிர்ணயம் செய்திருந்தது.

விருதுநகரிலுள்ள நாடார் உயர்நிலைப்பள்ளியில் கல்வியை எல்லோருக்கும் இலவசமாகக்கியிருந்தனர்.

இதன் அடிப்படையில் தான் தலைவர் காமராஜர் தமிழ்நாடு முதல் அமைச்சரானதும் எல்லா பள்ளிகளிலும் கல்வி கற்க சம்பளம் வசூலிப்பதை நிறுத்தி எல்லாருக்கும் இலவசக் கல்வியை அளித்தார்.

1918 ல் எட்வர்ட் பாடசாலைக்கு சொந்தக் கட்டிடம் கட்டும் பொழுது இடம் வழங்குவதில் இந்து நாடார்கள் மகமை கமிட்டியினர்களுக்கும் பாடசாலை கமிட்டியினர்களுக்கும் தகராறு ஏற்பட்டு விட்டன.

பத்திரகாளியம்மன் கோவில் மற்றும் நந்தவனம் அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கு தெற்கேயுள்ள காலி இடத்தில் பள்ளிக்கு கட்டிடம் கட்ட வேண்டுமென்பது மானேஜமெண்ட் கமிட்டியின் விருப்பம்.

இந்த இடம் நாடார்கள் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட இடமாகையினால் இதைக் கொடுக்க முடியாது என்று உறுதியாக கூறப்பட்டு விட்டது. இதை தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தை நடுவர்கள் சமாதானம் செய்து ஆண்டவரின் வாக்கை கேட்டு அதன்படி நடந்து கொள்ளும்படி தீர்ப்பளித்தனர்.

அப்பொழுது ஆண்டவரின் வாக்கை கூறுவதற்கென்றே திருமதி லெட்சுமியம்மாள் என்ற பெண் தலைவி இருந்தார்கள். ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் திடலில் பெருந்திரளாக கூடியிருந்த நாடார் மக்களின் முன்பு அந்த அம்மையாருக்கு அருள் வந்து பிள்ளைகளே கல்வி நமது கண்ணடா அதைப் பேணி காத்திடுங்கள் என் இடத்திலேயே கட்டிடமும் கட்ட அனுமதிச்சிட்டேன் என்று வாக்கு கூறியது.

அதன் பின்னர் யாவரும் சமாதானம் அடைந்து பள்ளி கட்டிடம் கட்ட இடம் கொடுத்து நிதி உதவியும் செய்தனர்.

திருமதி. லெட்சுமியம்மாளிடம் தனியாக வேண்டி இவ்விதம் சாமார்த்தியமாக கூறச் செய்து விட்டார் அருணாசல நாடார் என்று பின்னர் பேசிக் கொண்டனர். இந்த ரசமான சம்பவத்தைப் பற்றி அக்காலங்களில் கதை கதையாக நாடார்மக்கள் பேசி கொள்வார்.

மாட்சிமிகு சிதம்பர நாடார் அவர்கள் அரைகுறையாக கட்டியிருந்த நாடார்கள் மகமை கட்டிடத்தை மாடியுடன் கட்டினார் மகன் அருணாசல நாடார். நந்தவனைத்தையும் சிறப்பாக முடித்துத் தந்தார்.

நகரில் பருத்தி வர்த்தகத்தை சிறப்பாக்க ரெயில்வே பீடர் ரோட்டில் நாடார்கள் பருத்தி மார்க்கெட்டை அமைத்து அதற்கு வரிசையாக கட்டிடமும் கட்டினார்.

இதற்காக ஆங்கிலேயே கம்பெனி நிர்வாகிகளின் உதவியை பெற்றார்.

இதில் கிடைக்கும் மகமையை பள்ளிக்கு உதவித் தொகையாக வழங்கச் செய்தார்.

இக்கட்டிடம் நாளடைவில் போதாது என்று ஏற்பட்டதும்



மதுரை டிரங் ரோட்டில் ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் கிழக்கே விசாலமான இடத்தில் புதிய பருத்திமால் கட்டிடத்தை கட்டினார்.

ஆங்கில மொழியில் அழகாக எழுதவும் பேசவும் ஆற்றல் படைந்திருந்தார் அருணாசல நாடார். மேல் நாட்டு அறிஞர்களுடன் பழகுவதற்கும் அவர்கள் மூலம் ஊருக்கு சேவை செய்வதற்கும் வாய்ப்புகளை பெற்றிருந்தார்.

மரியாதைக்குரிய சிதம்பர நாடாரைப் போலவே அருணாசல நாடார் அவர்களுக்கும் ஏ அண்ட யப் ஹார்வி கம்னியாருடன் வர்த்தகத் தொடர்பு கொண்டு அதன் மூலம் அப்பொழுது மானேஜிங் டைரக்டராக இருந்த மிஸ்டர் ஆன்ரு மற்றும் பிராங்க் ஹார்வி இவர்களுடன் நெருங்கிய உறவை நீடித்துக் கொண்டிருந்தார்.

1916 முதல் 1926 வரை பத்து ஆண்டுகள் சாத்தூர் நகர் பேரூராட்சி மன்றத்தின் சேர்மனாக வீற்றிருந்தார். அலுவலக கட்டிடத்தை வடக்கு ரத வீதியில் தனக்கு சொந்தமான இடத்தில் வாடகையில்லாமல் வைத்திருந்தார். குடிநீர் திட்டம், சாக்கடைத் திட்டத்தில் அதிக அக்கறை காட்டினார்.

இவரது மகன் திரு. க.சொ.அ. லெட்சுமண நாடார் 1940 லிருந்து 1952 வரை சாத்தூர் பேரூராட்சியின் சேர்மனாகயிருந்தார். இவ்வளவு அதிககாலம் தொடர்ந்து சேர்மனாகயிருந்தவர் இவர் ஒருவரே. அதைப் போலவே இவரது தம்பி மகன் திரு. K.C.A.D. ஞானகிரி நாடார் சிவகாசியில் பல ஆண்டுகள் நகராட்சி கவுன்சிலராகவும், துணை தலைவராகவும், சேர்மன் பொறுப்பிலும் இருந்து வந்தார்.

1914 ம் ஆண்டு நடைபெற்ற உலக யுத்தத்தின் முடிவில் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டது. அதைத் தீர்ப்பதற்காக அருணாசல நாடார் பி.டி. சீனிவாச ஐயங்கார், நடேச ஐயர், பிச்சாண்டி சேர்வை, ஜமால் கான் சாகிப் ஆகியோரடங்கிய குழுவை அரசு நியமித்தது.

இக்குழவினர் அரசிடம் அரிசியை கொள்முதல் செய்து குழுவின் நிதியிலிருந்து நட்டத்தை ஈடு செய்ய பணம் கொடுத்து

வழங்கினர். 4 படி அரிசி ஒரு ரூபாய்க்கு கொடுத்தனர்.

அப்பொழுது சாத்தூரில் சப் கலெக்டராகயிருந்த திரு. டி.ஆஸ்டின் ஐ.சி.எஸ். இக்குழுவின் தலைவர் அருணாசல நாடாரையும் குழுவினர்களையும் பாராட்டினார்.

அருணாசல நாடார் தனது தந்தை நடத்தி வந்த நவதானியக் கடை, பருத்தி வியாபாரத்தை தொடர்ந்து நடத்தவில்லை. நூல் வியாபாரம், மண்ணெண்ணை ஏஜெண்ட், மரக்கடை வர்த்தகம் நடத்தி வந்தார்.

30.6.1921 லிருந்து 1.7.1921 வரை சாத்தூரில் நாடார் மகாஜன சங்க மாநாட்டை அருணாசல நாடாரும், வேலாயுத நாடாரும் வரவேற்பு குழு அமைத்து அலங்கார பந்தல், ருசியான உணவு இவைகளுக்கு ஏற்பாடு செய்து இம்மாதிரி மாநாடு இதுவரை அமையவில்லை என்று இன்னும் பெருமையாக பேசும் அளவுக்கு சிறப்போடு நடத்தினார்.

நாகர்கோவிலில் 26.12.52,27.12.52 தேதிகளில் நடைபெற்ற நாடார் மகாஜன சங்க மாநாட்டிற்கு திரு. K.C.A.D. சிதம்பர நாடார் தலைமை தாங்கி திட்டங்கள் வழங்கி நாடார்களை தொழில் துறையை செம்மையாக நடத்தி வரும்படி கேட்டுக் கொண்டார்.

அவர் பேருரை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று மார்ஷல் நேசமணி அம்மாநாட்டில் பேசினார்.

1888 ல் பெரிய கொல்லபட்டியில் பிரெஞ்ச நாட்டை சேர்ந்த மறைத்திரு. டிரான்ங்கால் அருளப்பர் என்ற பாதிரியார் மாதா கோயிலை கட்டினார். நிரபராதிகளுக்காக இவர் நீதிமன்றங்களிலே இலவசமாக வழக்காடுவார். கிராமங்கள் தோறும் குதிரை மீது ஏறி சென்று சீர்திருத்தப்பணிகளை செய்து வருவார்.

இவர் காலத்தில் தான் பெரிய கொல்லபட்டியில் காரியக்காரர் சண்முக நாடார் மகள் திருமணத்தில் பல்லாக்கு ஏறக்கூடாது என்ற ஜமீன்தார் கருத்திற்கு எதிராக சண்முக நாடார் மகன் திருமணத்திற்கு பாதுகாப்பு அளித்து ஊர்வலம் வரச் செய்யப்பட்டது.

அப்பாதிரியாருக்கும் மாண்புமிகு சிதம்பர நாடாருக்கும்





K.C.A.D.ஞானகிரி நாடார்
சிவகாசி

பொதுமக்களுக்கு நல்ல நட்பு. சாத்தூரில் 1892 ல் மறைத்திரு. பி. பெர்த்யூ,1896 ல் மறைத்திரு. பி. மார்த்தின் 1898 ல் மறைத்திரு. டாலன் என்ற முடியப்ப சுவாமிகள் 1902 ல் மறைத்திரு. P. அர்ப்புதம் என்ற பாதிரியார்களெல்லாம் சிதம்பர நாடாரின் நட்பை நாடியவர்கள்

1906 ல் மறைத்திரு. அல்போன்ஸ் ஹாஸ் சுவாமிகள் தான் சாத்தூரில் 120 அடி உயரமுள்ள மாதா கோவிலை கட்டினார். இவருக்கும் அருணாசல நாடாருக்கும் நல்ல தொடர்பு. இவர் ஜெர்மனி நாட்டை சேர்ந்த அல்ஸஸ்ஸானான் எனும் இடத்தைச் சேர்ந்தவர்.

இவரது சகோதரர் சங். ஹாஸ் சுவாமியவர்கள் திருச்சிராப்பள்ளியில் சூசையப்பர் கல்லூரியில் பௌதீக சாஸ்திர நிபுணராகயிருந்தார்கள். இவருக்கு K.C.A. அருணாசல நாடாருக்கும் நல்ல நட்பு. ஜெர்மன் நாட்டுக்கு அழைத்துப் போவதாக இருந்தார்.

சர்ச் ஆப் சவுத் இண்டியா பிரிவைச் சேர்ந்த செயின்ட் பால்ஸ் சர்ச் கட்டிடத்தை கட்டியவர் அப்பாத்துக்கேலி டாக்டர் மல்லன்ஸ அவர்களுக்கும் மாட்சிமிகு சிதம்பர நாடாருக்கும் பிரிக்க முடியாத நட்பு உண்டு.

28.3.1919 ல் சாத்தூருக்கு வருகை தந்த மகாத்மா காந்திக்கு ரெயில் நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்பொழுது நகரத்தின் தந்தையாக இருந்த அருணாசல நாடார் அவர்கள் நகர் மக்களின் சார்பில் ரெயில் நிலையம் சென்று மகாத்மா காந்திக்கு மலர் மாலை சூடி வரவேற்றார்.

1923 ல் சாத்தூரில் நடைபெற்ற தமிழ் மாகாண காங்கிரசு மாநாட்டிற்கு பேரூராட்சி மன்றத்தின் சார்பில் தண்ணீர் வசதி, சுகாதார வசதிகளை செய்து கொடுத்தார் சேர்மன் அருணாசல நாடார். இம் மாநாட்டை காமராஜர் தொண்டராகயிருந்து நடத்தினார்.

இவ்வித தேசப்பற்றும் இக்குடும்பத்தினரிடையே ஓங்கி வளர்ந்திருந்தது. K.C.A.D. சிதம்பர நாடாரும், K.C.A.D. ஞானகிரி நாடாரும் தேச பக்தி மிக்கவர்கள். காந்தியடிகள் உன்னத லட்சியங்களை பின்பற்றி வந்தனர்.

1929ம் வருடம் K.C.A.D. சிதம்பர நாடார் காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தை பார்வையிட்டு அதன் உயர்ந்த லட்சியங்களை மக்கள் சேவையில் பயன்படுத்தினார்.

ஏழைப் பிள்ளைகள் கல்வியை நாடி வரமுடியாவிட்டால் கல்விதான் அவர்களை நாடி போக வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறினார்.

அதை தமிழகத்தில் நடைமுறைப்படுத்தினார் பெருந்தலைவர் காமராஜர். கல்வி கண்ணைத் திறந்தார். ஏழைகளை படிக்கச் செய்தார்.


காமராஜருக்கு முந்திய சகாப்தத்தில் சாத்தூர் சிவகாசியில் உயர்நிலைக் கல்வி படிக்க முடியாத நிலையை மாற்றி இப்பகுதியில் கல்விக் கூடங்களை அமைத்த பெருமை சிவகாசி K.C.A.D. சிதம்பர நாடார் முதாதையர்களுக்கே உண்டு.

அவரது மூத்த சகோதரர் K.C.A. ஞானகிரி நாடார் சிவகாசியில் இந்த நாடார்கள் விக்டோரியா பாடசாலையை துவக்கினார். சாத்தூரில் அது போன்று ஒரு பாடசாலையை ஆரம்பிக்க தம்பி திரு. K.C.A. சிதம்பர நாடார் எடுத்துக் கொண்ட முயற்சி வீணாயிற்று. 1902ல் அவர் மறைந்து விட்டதினால் அவரது இரண்டாவது குமாரர் திரு. K.C.A. அருணாசல நாடார் 1910ல் சாத்தூரில் இந்து நாடார் எட்வர்ட் பாடசாலையை ஆரம்பித்தார். 1921 ல் பெண்கள் பாடசாலையையும் துவக்கினார். இவரது இளைய தம்பி திரு. தர்மராஜ் நாடார் அவர்களின் பிள்ளைகளே திரு. K.C.A.D. சிதம்பர நாடார், K.C.A.D. ஞானகிரி நாடார் அவர்களாகும். (K.C.A.சிதம்பர நாடார் அவர்களின் பேரன்களாகும்)

இவர்கள் இருவர்களுமே சிவகாசியிலும் சாத்தூரிலும் கல்விப் பணியை செய்ய முன் வந்தனர். கல்வி வளர்ச்சியை முக்கிய சேவையாக கருதியவர்கள்.

இவர்கள் இருவர்களும் இன்று நம்மிடையே இல்லை. இருப்பினும் நாம் அவர்கள் பணியை பற்றி இப்பொழுது சிந்திக்கிறோம்.





எத்தல் ஹார்வி சீமாட்டியுடன்
A.S. தங்கவேல் நாடார்
K.C.A D. சிதம்பர நாடார் ஆகியோர்

திரு. அருணாசல நாடார் சாத்தூர் எட்வர்ட் உயர்நிலைப்பள்ளி மானேஜராகயிருந்த சமயம் சமஸ்கிருதத்தை இஷ்டபாடமாக்கினார். டைப்ரைட்டிங் கற்றுக் கொள்வதை கட்டாய பாடமாக்கினார்.

K.C.A.D. சிதம்பர நாடார் தனது மானேஜ்மெண்டில் இந்தியை கட்டாய பாடமாக்க உதவினார். பொதுமக்களும் இந்தியை கற்றுக் கொள்ளும் வண்ணம் விடுமுறை வகுப்பையும் துவக்கினார்.

ஒன்றாவது, இரண்டாவது வகுப்புகளுக்கு காகிதம் மடித்தல், களிமண் வேலையும், நான்கு, ஐந்து வகுப்புகளுக்கு கயிறு திரித்தல், விசிறி பின்னல், பஞ்சு சுத்தம் செய்து திரிபோட்டு நூல் நூற்றல் முதலிய வேலைகளையும், ஆறு,ஏழு,எட்டு வகுப்புகளுக்கு கைத்தறியில் நெசவு செய்யவும் கற்பிக்கச் செய்தார்.

மாணவிகளுக்கு தையல் கற்றுக் கொடுக்கச் செய்தார்.

1938 ல் லண்டன் சென்று விட்டுத் திரும்பிய சிவகாசி ராவ் சாகிப் K.A.M.A. காளியப்ப நாடார் அவர்களுக்கு சாத்தூரில் K.C.A.D. சிதம்பர நாடார் வரவேற்பும், பாராட்டும் எட்வர்ட் உயர்நிலைப்பள்ளியில் வைத்திருந்தார்.

சிவகாசியில் நாடார் உயர்நிலைப்பள்ளி மானேஜ்மென்டை ஏற்று நிர்வாகத்தில் கெட்டிகாரர் என்று புகழ் பெற்றிருந்தார் திரு. K.A.M.A. காளியப்ப நாடார் அவர்கள்

சாத்தூரில் சிதம்பர நாடார் ஆற்றிவரும் கல்வித் தொண்டையும், ஆதாரக் கல்வி முறையையும் கண்டு வியந்ததுடன் நிர்வாகத்தில் தன்னை முந்திவிட்டார் என்று பாராட்டி பேசினார்.

K.C.A.D. சிதம்பர நாடார் சாத்தூரில் கல்வித் தொண்டைத் தான் முக்கியமாக வைத்திருந்தார். நகர் அபிவிருத்தி, மகமை விவகாரங்களில் இதற்காக பாடுபடும் பிரமுகர்களுக்கு ஒத்துழைப்பு அளித்து வந்தார்.

சிவகாசியில் நகராட்சியில் சில ஆண்டுகள் உறுப்பினராக இருந்திருக்கிறார். வனப்புமிக்க ஒரு நவீன நகராக சிவகாசி அமையப்பாடுபட்டார்.

பல அடுக்கு கட்டிடங்கள், அகன்ற சாலைகள், பரந்த நடைபாதைகள், நவீன கடைகள், பூங்காக்கள், சதுக்கங்கள் இவையாவும் நிறைந்து சிந்தையாற்றும் பொலிவுடன் சிவகாசி மிளிர வேண்டும் என்று திட்டமிட்டார். இதற்கு அவரது தம்பி ஞானகிரி மிகுந்த ஒத்துழைப்பு கொடுத்தார்.

சிவகாசி இந்து நாடார்கள் மகமை பண்டு துணைத்தலைவராகவும், சிவகாசி கூட்டுறவு பண்டகசாலை, சிவகாசி கூட்டுறவு பால் வழங்கும் சங்கம், கூட்டுறவு அர்பன் பாங்க், கூட்டுறவு இன்டெண்ட்ரியல் எஸ்டேட், கூட்டுறவு அச்சுத்துறை சங்கம், மாஸ்டர் பிரிண்டர்ஸ் அசோஷியேஷன், ரோட்டரி கிளப், அதிகாரிகள் கூட்டுறவு பண்டகசாலை, கூட்டுறவு வீடுகள் கட்டும் சங்கம், சிவகாசி நாடார்கள் விக்டோரியா உயர்நிலைப்பள்ளி, சிவகாசி நாடார்கள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, காரநேசன் காலனி நடுநிலைப்பள்ளி குழு, அகில இந்திய மாஸ்டர் பிரிண்டர்ஸ் பெடரேஷன் நிர்வாக கமிட்டி ஆகியவற்றில் தலைவராகவும், துணைத் தலைவராகவும் ஞானகிரி நாடார் பணியாற்றினார்.

சிதம்பர நாடார், ஞானகிரி நாடார் ஆகியவர்களுக்குள்ள அடையாளம் பொங்கி வழியும் சிரிப்பும், கள்ளங்கபடமற்ற குதூகலமான முகத்தோற்றமுமேயாகும்.

அவர்களது மூதாதையர்களான ஞானகிரி நாடார் சிதம்பர நாடார் செய்து வந்த வர்த்தகத்துடன் தொழில் துறையை துவக்கி தங்கள் குடும்பத்தை செல்வச் செழிப்பாக்கினார்கள்.

1) கார்நேஷன் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி

2) கார்நேஷன் பிரிண்டிங் இங்க் மானுபேச்சரிங், சிவகாசி

3) உமா இங்க் அண்ட் வார்னீஸ் ஒர்க்ஸ், சிவகாசி

4) விசாலாட்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சிவகாசி

5) K.C.A.D. சிதம்பர நாடார் அன்கோ சாத்தூர் மற்றும் சிவகாசி

6) நேஷனல் பேப்பர் கம்பெனி, சிவகாசி



7) ஞானகிரி டிரேடிங் கம்பெனி, சிவகாசி

இவ்வாறு தொழிலையும் வர்த்தகத்தையும் பெருக்கினார். இத்தொழில் நிறுவனங்களை நிர்வகிக்க K.C.A.D. சிதம்பர நாடார் குமாரர்களான திரு. D.C. பாஸ்கரன் D.P(Tech),LONDON திருமிகு. D.C பார்லி தர்மராஜன், திரு. D.C. ராஜசபை ஆகியவர்களையும், K.C.A.D. ஞானகிரி நாடார் குமாரர்களான திருமிகு. D.G. தர்மா L.P.T., திருமிகு. D.G. ஞானகிரி கணேசன் B.E. ஆகியோர்களையும் மேலை நாடுகள் அச்சுத்துறையில் பெற்றுள்ள சிறப்புகளை அறிந்து வர உலக முழுவதும் சுற்றி வர அனுப்பி வைத்தனர்.

அச்சுத்துறையில் இவர்கள் பெற்ற அனுபவமும், திறமையும் இந்திய தேசீயப் பரிசை கார்நேஷன் லித்தோ ஒர்க்ஸ் பெற்றது.

கல்வியை வளர்க்க தங்களது பாட்டனார்களான சிதம்பரம், ஞானகிரி பெயரால் அறக்கட்டளை ஏற்படுத்தினர்.

சாத்தூரில் K.C.A.D. சிதம்பர நாடார் எட்வர்ட் உயர்நிலைப்பள்ளி மானேஜ்மெண்ட் பொறுப்பை ஏற்றதும் நிர்வாகத்தில் செய்யப்பட்ட அபிவிருத்திகள் கணக்கிலடங்கா. ஏழு அறைகள் கொண்ட மேல் பாக கட்டிடத்தை 1939 ல் கட்டினார். பாடசாலையை சுற்றியிருந்த நிலங்களை விலைக்கு வாங்கியும், K.C.A.S. துரைராஜ் நாடாரிடம் நன்கொடை பெற்றும் தனக்குச் சொந்தமாகயிருந்த நிலத்தை பள்ளிக்கு இனாமாக கொடுத்தும் பாடசாலைக்கு விரிவான இடங்களை சொந்தமாக்கினார்.

அதற்கு சுற்றுப்புறச் சுவர் கட்டினார். ஆரம்ப பாடசாலைக்கு புதிதாக கட்டிடம் கட்டினார். மனேஜ்மெண்ட் கமிட்டி K.C.A.D. சிதம்பர நாடாருக்கு கொடுக்க வேண்டிய கடன் ரூ. 19493.38 யை நன்கொடையாக அளித்து புதிய நிர்வாகிகளுக்கு சுமையில்லாமல் செய்து கொடுத்தார்.

மாணவர்கள் விளையாடுமிடத்தை விரிவுபடுத்தி அழகான திடலை அமைத்து விளையாட்டு அரங்கமும் கட்டினார்.

மாணவர்கள் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ள உற்சாகம் காட்டினர். ரூ. 2000 ரூபாய் நன்கொடை அளித்து ஸ்காலர் ஷிப் வழங்கச் செய்தார்.

18-8-74 ல் கல்விக்காக இவர் 37 ஆண்டுக்குள் ஆற்றிய பணியை சாத்தூர் மக்கள் பாராட்டி விழா நடத்தி எட்வர்ட் பள்ளியிலுள்ள விளையாட்டு அரங்கத்திற்கு K.C.A.D. சிதம்பர நாடார் விளையாட்டு அரங்கம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

பெண்களுக்காக நடத்தப்பட்டு வந்த மேரி பெண் பாடசாலையின் நிர்வாகத் தலைவராகயிருந்த திரு. ஆ.ச. தங்கவேல் நாடாரும், நிர்வாக மானேஜராக இருந்த திரு. K.C.A.D. சிதம்பர நாடார் அவர்களும் தங்கள் சிந்தனையில் எத்தல் ஹார்வி உயர்நிலைப்பள்ளி என்ற பெயரால் பெண்களுக்கான பள்ளியை துவக்குவது என்று தீர்மானித்து 7.6.48ல் விடாமுயற்சியுடன் ஆரம்பித்தனர்.

ஹார்வி வர்த்தக ஸ்தாபனத்துடன் நூறு ஆண்டுகளாக தொடர்பு கொண்டிருந்த சிதம்பர நாடார் குடும்பத்துக்கு இம்முயற்சி கடும் சோதனையைத் தரவில்லை. அதைப்போலவே ஹார்வி ஸ்தாபனத்துடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்த தங்கவேல் நாடாருக்கும் சிரமத்தை அளிக்கவில்லை.

ஹார்வி வர்த்தக ஸ்தாபனம் அப்பொழுது மதுரை மில்ஸ் என்ற பெயரில் மாற்றபட்டிருந்தது. அதன் மானேஜிங் டைரக்டர் மிஸ்டர் சர். ஜேம்ஸ் டோக் அவர்கள் இக்கல்வி சாலையை துவக்கி வைத்தார்.

9.2.48 ல் திருமதி எத்தல் ஹார்வி, திரு. ஆன்ரு ஆர் வி சர்ஜேம்ஸ் டோக், திருமதி ஹெலன் டோக் ஆகியோர் சாத்தூர் வந்திருந்து பள்ளி இடத்தை பார்வையிட்டு திருமதி. எத்தல் ஹார்வி பெயரால் ரூ. 25000மும், மதுரை மில்ஸ் கம்பெனியிலிருந்து ரூ.20,000மும் நன்கொடையாக தந்து பாடசாலை நடைபெற்று வரும் மதுரை மில்ஸ்க்கு சொந்தமான கட்டிடத்தையும், அதைச் சேர்ந்த நிலத்தையும் பாடசாலைக்கு அசல் கிரையத்திற்குக் கொடுக்க சம்மதித்தார்கள்.

9-2-73 ல் இப்பள்ளிக்கு வெள்ளி விழாவை நடத்தி லட்சம் ரூபாய் நன்கொடையாக பெற்று நூலக கட்டிடமும் கட்டினார்.

செகண்டரி பாடசாலைக்கு சர்க்காரிடமிருந்து அதிகாரம் கிடைத்து. ஒன்று முதல் மூன்று பாரங்கள் வரை 1948 லிருந்து





**D.C. ராஜசபை**

தொடங்கப் பெற்றது.

7.6.48ல் அப்பள்ளி வளாகத்திற்குள் பெண்களுக்கான ஒரு விடுதியை லேடி டோக் ஹாஸ்டல் என்ற பெயரால் துவக்கி அதற்கு சர் ஜேம்ஸ் டோக் அடிப்படைக் கல் நாட்டினார்கள்.

வெள்ளைக்கார வர்த்தகர்களிடம் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்று அவர்களிடம் நன்கொடை வசூலித்த K.C.A.D. சிதம்பர நாடார் சேவையை பொது மக்களும் அதிகாரிகளும் பாராட்டினர்.

இவருக்கு பக்க துணை ஆ.ச. தங்கவேல் நாடார். இவருடைய சுபாவங்களும், அனுபவங்களும் வேறு வேறாகயிருந்தாலும் ஒன்றுக்கொன்று துணையாகயிருந்தன. தங்கவேல் நாடார் அனுபவத்துறையில் சாமர்த்தியமாக நடந்து கொள்வதில் கெட்டிக்காரர். சிதம்பர நாடார் அறிவுத்துறையில் மிக சாமர்த்தியமாக நடந்து கொள்ளும் புத்திசாலி.

இருவரிடத்திலும் மனோ உறுதி, விடாமுயற்சி இருந்தது. இருவரும் சலியாது உழைத்தனர். எவ்வளவு துன்பங்கள்,அவமானங்கள் வந்தாலும் எளிதிலே சமாளித்துக் கொள்வர், பொதுநலத்தில் சொந்த மதிப்பை பாராட்டமாட்டார்கள்.

எத்தல் ஹார்வி பெண்கள் உயர்நிலைப்பள்ளியை ஓர் ஆலயத்திற்கு சமமாக வைத்து நடத்தி வந்தார். சிதம்பர நாடார் அங்கு படிக்கும் குழந்தைகளுக்கு தெய்வமாக விளங்கினார். 27.2.68 ல் ஆ.ச. தங்கவேல் நாடார் இறந்ததும் அவருக்கு பதிலாக அவரது மருமகன் திரு. ஆ.ச.காளியப்ப நாடாரை நிர்வாக குழு தலைவராக தேர்வு செய்து சிதம்பர நாடார் பள்ளியை சிறப்பாக நடத்தி வந்தார். மாநிலத்திலேயே அதிக மதிப்பெண்களை மாணவிகள் பெற்று பள்ளிக்கு நல்ல மதிப்பையும், மரியாதையையும் பெற்றுத் தந்தனர்.

இப்பள்ளியின் சிறப்புக்கு ஆசிரியைகளும் தலைமை ஆசிரியை திருமதி. ஏ. கிரேஸ் கமலம் B.A.,B.T., அவர்களின் பயிற்சியுமாகும்.

இவற்றை தற்போதுள்ள தலைமை ஆசிரியை

சி. சரோஜாவும் ஆசிரியைகளும் செய்து வருகின்றனர்.

9.2.1954 ல் சாத்தூர் பேரூராட்சி மன்றம் திருமதி எத்தல் ஹார்வி, திரு. ஆன்ரூ.ஆர்விக்கும் வரவேற்பு அளித்தது. ரெயில்வே நிலையத்திலிருந்து பேருந்து நிலையம் வரை புதிதாக அமைக்கப்பட்ட சாலைக்கு எத்தல் ஹார்வி ரோடு என்று பேரூராட்சி மன்றம் 30.6.53 ல் பெயர் சூட்டி அத்தம்பதிகளின் கல்விப்பணியை பாராட்டியது.

அப்பாதை அமைக்க திரு. ஆ.ச. தங்கவேல் நாடார், திரு. K.A. பால் நாடார், திரு. K.C.A.D. சிதம்பர நாடார், திரு. M.A.C. செண்பகலிங்க நாடார், திரு. K.S.A. பெரியசாமி நாடார் தங்கள் பெயருக்குள்ள நிலத்தை பேரூராட்சி மன்றத்திற்கு 1952 ல் நன்கொடையாக வழங்கியதைப்போல மதுரை மில்ஸ் கம்பெனியாரும் தங்களுக்குள்ள நிலத்தை இனாமாக அளித்து உதவினர்.

இவைகளெல்லாம் K.C.A.D. சிதம்பர நாடார் அவர்களின் கல்விப்பணிக்கு அளித்த உற்சாக நடவடிக்கையாகும்.


9.2.74 ல் எத்தல் ஹார்வி உயர்நிலைப்பள்ளி நடத்திய விழாதான் K.C.A.D. சிதம்பர நாடார் கலந்து கொண்ட கடைசியான நன்கொடையாளர்கள் தினம்.

அவற்றில் கலந்து கொண்ட மதுரை கோட்ஸ் மேனேஜிங் டைரக்டர் மிஸ்டர் M.B.S. ஹென்றி ஆர்வி மில்லின் பங்களா கட்டிடத்தையும் அதைச் சுற்றியுள்ள காம்பவுண்டு அடங்கிய காலி நிலத்தையும் எத்தல் ஹார்வி பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு இனாமாக அளிப்பதாக அறிவித்தார். இதை சிதம்பர நாடார் எதிர்பார்க்கவில்லை.

எத்தல் ஹார்வி பெண்கள் பள்ளியின் தோற்றத்திற்கு தனியாக ஒரு புத்தகமே வெளியிட வேண்டுமென்று K.C.A.D. சிதம்பர நாடார் கருதினார். அவ்வளவு வரலாறுகளும் சம்பவங்களும் நிறைந்தது அவரது சரிதம்.

சிதம்பர நாடார் ஆத்திகர்தான். கடவுள் நம்பிக்கையுள்ளவர்.





D.C. ராஜசேபதி பா. ராஜாமணி
நல்வாழ்த்து

ஆனால் செயல்களில் நாத்திகரைப்போல நடந்து கொண்டவர். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான் என்பது தான் அவரது கருத்துக்கள்.

எல்லா ஆற்றல்களும் நமக்குள்ளேயே இருக்கின்றன. அதை உணர்ந்து அந்த ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். நாம் எதையும் சாதிக்க வல்லவன் என்ற உறுதியுடன் செயலாற்ற வேண்டுமென்று கூறுவார்.

அவர் தமது சேவைக்கு கல்வியை எடுத்துக்கொண்டார். மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் முழுத்தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வியாகும்.

மலை முகமதுவிடம் செல்லாவிட்டால், முகமது தான் மலையிடம் செல்லவேண்டும், ஏழைப்பிள்ளைகள் கல்வியை நாடி வர முடியாவிட்டால் கல்விதான் அவனை நாடிப் போக வேண்டும் என்று கூறுபவர் சிதம்பர நாடார்.

கல்வியை நாடி வருபவர் குறைவாக இருந்த காலம் அது. அக்கல்வியை ஏழைகளிடம் எடுத்துச் சென்றார் சிதம்பர நாடார். அதற்காக அவர் எடுத்துக் கொண்ட சிரத்தை அதிகம். வலிமையுடன் சிரத்தையைப் பெற்றவராகயிருந்தார் சிதம்பர நாடார். அவர் வெற்றிக்கு இது தான் ரகசியம். 8.6.75 ல் மாரடைப்பினால் மரணமடைந்து விட்டார். அவர்வகித்த வந்த சாத்தூர் எத்தல் ஹார்வி பெண்கள் உயர்நிலைபள்ளி தாளாளர் பொறுப்பை அவரது இளைய மகன் திரு. D.C. ராஜசபை ஏற்றுக் கொண்டார்.

உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தி அனுமதி பெற்றார். அதற்குரிய அடுக்கு மாளிகை கட்டிடத்தையும் கட்டினார் ராஜசபை.

ஆண்டுதோறும் நன்கொடையாளர் தினத்தை விடாமல் நடத்தி பிரமுகர்களிடம் நன்கொடையும் பெறுகிறார்.

எப்பொழுதும் மாணவிகளின் கல்வியும், தேர்ச்சியும் வளப்பமாகவேயிருந்து வருகிறது.

பள்ளிக்கு வருகிறவர்களையெல்லாம் ஆலயத்தின்

தோற்றமும் அமைதியும் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

சிதம்பர நாடார் வளர்த்த அறிவு வளர்ச்சி பணியை அமைதியாக திரு. இராஜசபை செய்து கொண்டிருப்பதில் சிதம்பர நாடாருடன் பழகியவர்களுக்கெல்லாம் பரம திருப்தி. சிதம்பர நாடார் உயிரோடிருந்து இவற்றை கண்ணுற்றுருக்க வேண்டும்.

சிவகாசியில் கார்நேஷன் காலனியில் நடுநிலைப்பள்ளியை தோற்றுவித்தார் சிதம்பர நாடார். சிவகாசியிலும் பல ஊர்களிலும் நடைபெற்ற பள்ளிகளுக்கும் கட்டிடம் கட்ட நிதி உதவி செய்தார்.

1973ம் ஆண்டு ஜுன் மாதம் 21 ந் தேதி அவரது தம்பி திரு. K.C.A.D. ஞானகிரி நாடார் மறைந்து விட்டார். 1.11.74ல் சிவகாசியில் கார்நேஷன் காலனியில் தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட ஞானகிரி நாடார் உருவச்சிலையை பெருந்தலைவர் திரு. K. காமராஜர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சிவகாசி நகரிலுள்ள தொழில்கள், குடியிருப்பு வசதிகள், நகரப் பொருளாதாரம், வர்த்தகம், பள்ளிக்கூடங்கள், கலாசார நிறுவனங்கள் சுகாதாரப் பாதுகாப்புகள் அனைத்தும் ஞானகிரி நாடாரின் செயலை நினைவுறுத்துகின்றன என்று திரு. கு. காமராஜர் அவ்விழாவில் கூறினார்.

இவ்விழாவை முன்னின்று நடத்திக் கொண்டிருந்த திரு. K.C.A.D. சிதம்பர நாடாரின் அதிக உழைப்பின் காரணமாக அன்று மயக்கமுற்று விழுந்து விட்டார். விழாவில் அவர் பங்கு பெற முடியவில்லை. தலைவர் காமராஜர் அவரது இல்லத்திற்கு சென்று உடல் நிலை விசாரித்தார்.

கடுமையான உழைப்பின் காரணமாக K.C.A.D. சிதம்பர நாடாருக்கு இவ்வாறு மயக்கம் ஏற்படலாயிற்று அப்பொதெல்லாம் அவருக்கு ஆறுதலான இடம் கன்னியாகுமரியும் அதன் காற்றுமே.

சாத்தூரில் அவர் தொடர்பில்லாமல் எப்பொதுக்காரியமும் நடப்பதில்லை. பாதாள சாக்கடைத் திட்டம், குடிதண்ணீர் திட்டம், மருத்துவ வசதி திட்டம், பூங்கா அமைப்பு, சாலை அமைப்பு என்று வரிசையாக நிறைவேற்றப்பட்ட திட்டமெல்லாம் சிதம்பர நாடாரின் ஆசீர்வாதத்தாலேயே நடைபெற்றது.





முன்னாள் ராணுவ அமைச்சர் 'உயர்திரு R. வெங்கட்ராமன்
முன்னாள் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்
ஆகியோருடன் D. C. ராஜசபை



வைப்பாற்றிலிருந்து குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதும் இன்னொரு குடிநீர் திட்டம் சாத்தூரில் அமைப்பது பற்றி விவாதிக்கப்பட்டு வந்தது. அப்பொழுது தாமிரபரணி தண்ணீரை சீவலப்பேரி அருகில் நீர்பிடிப்பிலிருந்து கோயில்பட்டிக்கு குழாய் மூலம் கொண்டு வரப்படும் திட்டத்திலிருந்து சாத்தூர் - சிவகாசிக்கும் கொண்டு வர வாய்ப்பு உள்ள செய்தியை K.C.A.D. சிதம்பர நாடாரிடம் நான் தெரிவித்த சமயம் அவர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

இதற்காக குடிநீர் வாரியத்தின் இன்ஜினியர்களையும், அதிகாரிகளையும் நான் சந்தித்து பேசி அவர்களின் நல்லெண்ணத்தை பெற்றிருப்பதாக நான் கூறியதும் அவர் என்னை ஆசீர்வதித்தார்.

சாத்தூருக்கு முதன்முதல் சிவகாசியிலிருந்து குடியேறியதே ஆற்றில் வசதியாக குளிக்கலாம் என்ற மகிழ்ச்சியான எண்ணத்திலேயே வந்ததாக K.C.A.D. சிதம்பர நாடார் அடிக்கடி சொல்லிக் கொள்வார்.

தாமிரபரணி தண்ணீர் சாத்தூருக்கு வருவதென்றால் அதை விட வேறு மகிழ்ச்சியான செய்தி இவருக்கு இருக்குமா? இத்திட்டம் அமுல்படுத்தும் பொழுது அவர் உயிரோடு இல்லை.

1957 ல் சாத்தூர் தொகுதியில் தமிழ்நாடு முதல் அமைச்சராகயிருந்து பொதுத்தேர்தலில் சட்டசபைக்கு நின்ற திரு. K.காமராஜர் அவர்களின் வெற்றிக்கு சிதம்பர நாடார் அரும்பாடுபட்டு உழைத்தார்.

1958 ல் சாத்தூர் வழியாக தூத்துக்குடி சென்ற பாரதப் பிரதமர் நேருஜிக்கு K.C.A.D. சிதம்பர நாடார் தலைமையில் சாத்தூர் மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர்.

ஆர்.வி. தம்பதிகளின் குடும்ப பாசத்தை பெரியவர் சிதம்பர நாடாரிலிருந்து K.C.A.D. சிதம்பர நாடார் வரை பெற்று வந்த விதைப்பை அவரது மூத்த மகன் திரு. D.C. பாஸ்கரன் பெற்று வருகிறார். அவர்களின் ஒரு பிள்ளையாகவே இவரை ஆர்.வி. குடும்பத்தினர் கருதி வருகின்றனர்.

லண்டனில் இவர்களது வீட்டிலேயே தங்கி திரு. பாஸ்கரன் [redacted] வருகிறார்.

படித்து வந்தார். லண்டன் செல்லும் பொழுதெல்லாம் அவர்கள் இல்லத்திற்கு சென்று இப்பொழுதும் தங்கி வருகிறார்.

கண்ணைப்போல கல்வியை பாதுகாத்து வளர்ப்பவர்கள் நாடார் சமூகத்தினர் என்று சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் உயர்திரு. N.D. சுந்தரவடிவேலு கூறுவார்.

வாரீசு வாரீசாக ஒரு குடும்பத்தினரே பரம்பரையாக கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டு வரும் குடும்பங்களில் மாட்சிமிகு K.C.A.D. சிதம்பர நாடார் குடும்பமும் தமிழ்நாட்டில் ஒன்றாகும்.

அக்குடும்பத்தில் ஞானகிரி நாடார் - சிதம்பர நாடார் என்ற சகாப்தம் ஆரம்பமாகியது. அவர்களின் வழித்தோன்றல்களான பேரன்மார்கள் கே.சி.ஏ.டி. சிதம்பர நாடார் - கே.சி.ஏ.டி. ஞானகிரி நாடார் என்ற புது சகாப்தம் சாத்தூர்,சிவகாசியில் தோன்றியது.


சாத்தூரில் அவர்களின் நினைவாக சிதம்பர நாடார் - ஞானகிரி நாடார் பெயரில் சிறுவர்,சிறுமிகளுக்கான பள்ளி துவக்கியுள்ளது.

இது போன்ற எத்தனையோ நல்ல திட்டங்களுக்கெல்லாம் சிதம்பர நாடார் - ஞானகிரி நாடார் பெயரை சாத்தூர் மக்கள் சூட்டி தாலாட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சாத்தூர் வைப்பாற்று வடகரையிலே, ரெயில்வே லயனுக்கு கிழக்கே பெரியவர் சிதம்பர நாடார் சமாதியில் தெய்வமாக வீற்றிருக்கிறார். அவர் குடும்பத்தின் தெய்வமாக இல்லை. நகர் மக்கள் அவரை தெய்வமாக வழிபட்டனர். வழிவழியாக வருடத்திற்குகொரு முறை விழாக் கொண்டாடினர். குடும்பங்கள் இடம் பெயர்ந்து செல்லும்போது பிடி மண்ணை எடுத்து வந்து தங்களது புதிய வீடுகளின் அருகில் பரப்பினர், முதல் ஆண் குழந்தை பிறந்தவுடன் குடும்பத்துடன் இக்கோயிலுக்கு சென்று குழந்தையின் தலையை மொட்டையடித்து, அம்முடியைக் காணிக்கையாகச் செலுத்தி வந்தனர். திருமணத்தின் போது முதல் அழைப்பை நகர் தேவதையான சிதம்பர நாடாருக்கு விடுக்கப்பட்டது.

இப்பொழுது அவர் குடும்பத்தைச் சேர்ந்த கே.சி.ஏ.டி. சிதம்பர நாடார் இளைய மகன் இராஜசபை ஆண்டுதோறும் தைப் பொங்கலன்று பொங்கல் வைத்து வழிபடுகிறார்.





K.C.A.D. சிதம்பர நாடார்
பொன் விழா கட்டடம்



K.C.A.D. சிதம்பர நாடார்
பொன் விழா கட்டிடம்

"ஓ மாபெரும் வீரர்களே நீங்கள் தூய்மை பொருந்தியவர்கள் துன்பப்படுபவனாகவும், பலவீனனாகவும் உன்னை நினைக்காதே எல்லாம் வல்ல ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள், கண்விழித்து எழுந்திரு. விழித்துக் கொள். உங்கள் இயல்பை வெளிப்படுத்துங்கள். என்று அக்கோயிலிருந்து வீர உரை கேட்கிறது. இது இராஜசபை ஒருவருக்குத்தான் கேட்கிறதா?"

கண் விழித்து எழுந்து செயல்படுகிறார் இராஜசபை. விழித்துக் கொண்டிருக்கிறார். எல்லாம் வல்ல ஆற்றல் படைத்தவனாக உணர்ந்து அவரது இயல்பை வெளிப்படுத்துகிறார். அவருக்கு அனுமானின் பலத்தை நகர தேவதை சிதம்பர நாடாரின் வீர உரை உணர்த்துகிறது.

திருவாளர்கள் A.S. தங்கவேல்நாடார் அவர்களும் K.C.A.D. சிதம்பர நாடார் அவர்களினாலும் நிறுவப்பட்ட சாத்தூர் இந்து நாடார்கள் ஏத்தல் ஹார்வி பெண்கள் மேல் நிலைப்பள்ளியின் 1948-98ம் ஆண்டின் பொன்விழா ஆண்டாக 7-6-98 ல் நடத்தப்பட்டது. பழைய மாணவிகள் ஒன்று சேர்ந்து நிறுவனர் திரு. K.C.A.D. சிதம்பர நாடார் அவர்களுக்கு நினைவுச் சின்னமாக K.C.A.D. சிதம்பர நாடார் நினைவு பொன்விழா கட்டிடம் கட்டி திறந்து வைத்தார்கள்.

இந்த நினைவாலயத்தில் நான்கு வகுப்பறைகள் இயக்கி வருகின்றன.

ஏத்தல் ஹார்வி மேல் நிலைபள்ளி மாணவிகள் படிப்பிலும்-விளையாட்டிலும், பொது அறிவிலும் தேர்ச்சி பெற்று தமிழகத்தில் முதன்மையாக விளங்கி வந்ததற்கு திரு. K.C.A.D. சிதம்பர நாடார் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இவரைப் பற்றி கணித்தபடி கல்வி வளர்ச்சிக்காக தன் வாழ்நாளில் முக்கால் பாகத்தை செலவிட்டது தான் காரணம் என்பதை தமிழர்கள் மறக்க முடியாது.

K.C.A.D. சிதம்பர நாடார் அவர்களை உயரிய மனிதர் என்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிப்பிட்டார்கள். அதை போலவே அவரது கல்வி வாரிசாக விளங்கும் அவரது இளைய மகன் திரு. D.C. ராஜசபை அவர்களும் சிதம்பர நாடார் இலட்சியத்தை நிறைவேற்றி வருகிறார்.

பள்ளி எல்லா வகையிலும் கோபுரமாக உயர்ந்து நிற்கிறது. தலைமை ஆசிரியை,ஆசிரியைகள், பெற்றோர்கள், பழைய மாணவிகள் ஒத்துழைப்பை பெற்று கல்வி வளர்ச்சியில் சிறப்பு நிலையில் உள்ளது.

கிராமமக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தைகளுக்கும் கல்வி முன்னுரிமையாக விளங்குகிறது. சாதி பேத மற்ற சமத்துவ பல்கலைக்கழகமாக விளங்கி வருகிறது.

இவை திருவாளர் K.C.A.D. சிதம்பர நாடார் அவரது முதாதையர்கள் அருணாசல நாடார் சாத்தூரின் தேவதை K.C.A. சிதம்பர நாடார் ஆகியோர்களுக்கு மன ஆறுதலை அளிக்கும் சரித்திரமாகும்.

சந்திரனில்லாத வானில் ராஜசபை சந்திரனை உருவாக்கியிருக்கிறார். அவர் மாட்சிமிகு K.C.A. சிதம்பர நாடார் ஆசி பெற்றவர்.

இந்த ஆசீர்வாதம் K.C.A.D. சிதம்பர நாடார் அவர்களின் நண்பர் நீதி அரசர் சிவசுப்பிரமணிய நாடார் அவர்களின் குடும்பத்துக்கும் உண்டு.

நீதிபதி சிவசுப்பிரமணிய நாடார் சாத்தூரில் ஜில்லா முன்சீப்பாக இருந்த காலத்திலிருந்து அவரது துணைவியார் திருமதி சுந்தரம்மாள் அவர்கள் சிதம்பர நாடார் குடும்பத்துடன் இந்த சமாதி சென்று வழிபடுவதுண்டு.

அக்காலத்தில் சாத்தூரில் மன்னார் கோட்டை சாலையில் (திரு.பா. இராஜாமணிக்கு சொந்தமான இல்லத்தில்) வசித்து வந்த செம்மல் திருமிகு. S.S. சிவா நாடார் அவர்கள் உலகப்புகழ் பெற்ற கம்ப்யூட்டர் பொறியாளராகும்.

இவருக்கும் இன்று சாத்தூர் தேவதை ஆசிவழங்கிக் கொண்டிருக்கிறது.





உலக அளவில் கம்ப்யூட்டர் தொழில் நிறுவனத்தை டெல்லியிலிருந்து நடத்தி வரும் கணி பொறியாளர் S.S. சிவா நாடார் அவர்கள் சாத்தூரில் பிறந்த இல்லம்.

மாமனிதர் K.C.A. சிதம்பர நாடார் அவர்களின் பேரன்களில் கல்வி மேதையாக விளங்கியவர்.



சாத்தூரில் 1885ல் வாழ்ந்து அவர் செய்த சாதனை–களினால் மாமனிதர் என்று கௌரவிக்கப்பட்ட K.C.A. சிதம்பர நாடார் அவர்களின் பேரனும் K.C.A. அருணாசல நாடார் தேனம்மாள் ஆகியோர்களின் மகனுமான, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் தமிழ்செல்வன் என்ற உயரிய பட்டத்தை ஆராய்ச்சிக்காக பெற்ற K.C.A. ஞானகிரி நாடார் அவர்கள் திருஉருவப்படம். சென்னையில் கல்வி கல்லூரியிலும்,சட்டக்–கல்வியும் பயின்றவர். கம்பெனி லாவில் வல்லுனர் மொழி ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டவர் Latin Word of Tamil Origin (1981), Greek Word of Tamil Origin (1982), English Word Containing Tamil Roots (1985) என்ற இவர் வெளியிட்டுள்ள ஆய்வு நூல்கள் ஆகும்.

இந்திய அரசு பாதுகாப்புக் குழுமத்தின் மேலாண்மை இயக்குனராகவும் பணியாற்றிய பெருமை இவருக்கு உண்டு. தனது இறுதி காலத்தில் மதுரையில் வசித்து 19–3–91ல் இயற்கை எய்தினார்கள். அவர் வாழ்ந்த பகுதிக்கு ஞானகிரி வீதி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.